# கல்வெட்டு

# *Kalvettu*

**திருவள்ளுவர் ஆண்டு 2041 சித்திரைத் திங்கள்**



சிற்ப வளங்கள் பேணுதல் மற்றும் பாதுகாத்தல் குறித்த விழிப்புணர்வு விழா,
மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலில் நடைபெற்ற வேதியியல் பாதுகாப்பு செயல்முறையை
சுற்றுலா (ம) பண்பாட்டுத் துறை செயலாளர்
முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப, மற்றும்
தொல்லியல் துறை முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்
முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப, பார்வையிடுகிறார்கள்

**கல்வெட்டு - காலாண்டிதழ் - 81 (ஏப்ரல் 2010) விலை : ரூ. 10.00**
**தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை**

T.1350.

# உள்ளே


| வ.எண். | | பக்கம் |
|---|---|---|
| | பதிப்புரை | |
| 1. | கீழக்குயில்குடி சமணப் பள்ளி<br>- தே. கோபாலன் | 1 |
| 2. | தாய் தெய்வ சுடுமண் உருவங்கள் - பூம்புகார்<br>- கோ. முத்துசாமி | 4 |
| 3. | செக்கார் வணிக சமூகம் - ஓர் வரலாற்றுப் பார்வை<br>- நாக. கணேசன் | 9 |
| 4. | நெற்குப்பை - தான ஓலையும், செப்பேடும்<br>- சொ. சந்திரவாணன் | 19 |
| 5. | ஓமந்தூர் பீமேசுவரர் கோயில் (ம)<br>வைகுந்தப் பெருமாள் கோயில் - ஓர் ஆய்வு<br>- இரா. சிவனாந்தம் | 25 |
| 6. | ஆரணி ஜாகீரின் வரலாறு<br>- து. துளசிராமன் | 27 |
| 7. | திருக்கோயில் மணிகள்<br>- கி. ஸ்ரீதரன் | 29 |
| 8. | வடபுதுப்பட்டு பழங்கால தூம்பு<br>- து. துளசிராமன் | 32 |
| 9. | சிவபாதமலர் வண்டும் சிவபாதசேகரனும்<br>- கோ. சசிகலா | 34 |
| | இராசாக்கள் மங்கலம் - அகழாய்வுப் பணிகள் 2009-2010 | 37 |
| | சிற்ப வளங்கள் பேணுதல் விழிப்புணர்வு விழா -<br>ஸ்ரீகபாலீஸ்வரர் திருக்கோயில் | 38 |


கட்டுரைகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாவர்


தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் அச்சகத்தில் அச்சிட்டு இத்துறை முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர் முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப., அவர்கள் சார்பாக தொழில்நுட்ப உதவியர். ஸ்ரீ. ஸ்ரீகுமார் அவர்களால் வெளியிடப்பெற்றது.

இணையதளம் www.tnarch.gov.in

மின் அஞ்சல் tnarch@tn.nic.in

# பதிப்புரை

வரலாற்று அறிஞர்கள், தொல்லியல் வல்லுநர்கள் ஆதாரங்களுடன் எழுதுகின்ற ஆய்வு கட்டுரைகள் இத்துறையின் 'கல்வெட்டு' காலாண்டிதழ்களில் தொடர்ந்து வெளியிடுவது வாயிலாக தமிழ்நாட்டின் பண்பாட்டு சிறப்பு வெளிப்படுகிறது என்றால் அது மிகையாகாது. தொல்லியல் துறையின் 81–ஆவது இதழாக வெளிவரும் இக்காலாண்டிதழ் அடிப்படைச் சான்றுகளைக் கொண்டு எழுதப்பட்ட கட்டுரைகள் மற்றும் செய்திகளின் தொகுப்பாகும்.

இவ்விதழில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகள் மூலம் அக்காலத்தில் செக்கு தொழிலுக்கும் செக்கு தொழிலை மேற்கொண்ட செக்கார் வணிக சமூகத்திற்கும் முக்கிய பங்கு அளிக்கப்பட்டுள்ளது கல்வெட்டு ஆதாரங்கள் மூலம் அறிய முடிகின்றது. பூம்புகாரில் (காவேரிப்பூம்பட்டிணம்) கிடைக்கப் பெற்றுள்ள தாய் தெய்வ உருவங்கள் தாய் வழிபாடு சங்க காலத்தில் சிறப்பு பெற்றிருப்பதனை அறிகிறோம். மேலும், திருக்கோயிலில் மணிகளின் சிறப்பும், வெளிநாட்டவர்கள் திருக்கோயில் தொண்டாக மணிகள் அமைக்க உபயம் அளித்து செய்திகள் சிறப்புடையதாகும்.

வேலூர் மாவட்டம், வடபுதுப்பட்டு காணப்படுகின்ற கருங்கல் தூம்பு என்னும் ஊரில் கி.பி. 12–13ஆம் நூற்றாண்டில் மலையடிவாரத்தில் தேங்குகின்ற மழை நீரை வீணாகாமல் முறைபடுத்தி விவசாயத்திற்கு பயன்படுத்தியுள்ள செய்தி குறிப்பிடத்தக்கது. வேதஜிபாஸ்கர் பந்த் ஆரணி ஜாகீராக பீஜப்பூர் அரசரால் நியமிக்கப்பட்டதும், திருவண்ணாமலை மாவட்டம் ஆரணிக்கு 5 கி.மீ. தொலைவிலுள்ள சத்திய விஜயநகரத்தை ஆரணி ஜாகீர்தார்கள் தலைமையிடமாக கொண்டு ஆட்சி புரிந்துள்ளதை அறியமுடிகிறது.

ஓமந்தூர் பீமேசுவரர் கோயில் (ம) வைகுந்தப் பெருமாள் கோயிலிலுள்ள இராசநாராயண சம்புவராயர் கல்வெட்டும், விஜயநகரர் கால கல்வெட்டும் இவ்வூரை 'ஓகந்தூர்' என்று குறிக்கின்ற செய்தி சிறப்புடையதாகும். இவ்வூரில்தான் தமிழக

முன்னாள் முதலமைச்சர் திரு. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் பிறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பீமேசுவரர் கோயிலில் கல்வெட்டுகள் இருப்பதை இத்துறைக்கு தெரிவித்த ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களின் உறவினர் திரு. ஓ. வி. பத்ரிநாராயணன் அவர்களுக்கு நன்றி.

இவ்விதழின் பதிப்புப் பணியினை மேற்கொண்ட திரு. ஸ்ரீ. ஸ்ரீகுமார் தொழில்நுட்ப உதவியர், டிடிபி மற்றும் அட்டைப்படம் வடிவமைத்த திருமதி. தே.சத்தியவதி, அச்சுப்பிழைதிருத்திய திருமதி கோ.செம்மலர் மற்றும் அச்சுப்பணியினை மேற்கொண்ட அச்சுப்பிரிவினருக்கும் இவ்விதழினை உருவாக்க கல்வெட்டாய்வாளர்கள் திரு. கி. சு. சம்பத், திரு. இரா. சிவானந்தம் ஆகியோர் நல்கிய பணிகள் சிறப்புடையதாகும். இக்கல்வெட்டு காலாண்டிதழிலுள்ள கட்டுரைகள் மற்றும் செய்திகள் தொல்லியல், வரலாற்று ஆய்வாளர்கள் மற்றும் மாணவர்களுக்கு பயனுள்ளவையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

சென்னை -600 008
23-8-2010

**தி. ஸ்ரீ. ஸ்ரீதர்**
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

**1**

# கீழக்குயில்குடி சமணப்பள்ளி

**தே. கோபாலன்**

தொல்லியல் அலுவலர், மதுரை

மதுரையை அடுத்த நாகமலைப் புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள சிற்றூர் கீழக்குயில்குடி. இவ்வூரில் அமைந்துள்ள மலைக்குச் 'சமண மலை' என்றே பெயர் வழங்குகிறது. சமணர்கள் வாழ்ந்த சமணர்க்குரிய மலையாக விளங்கியமையால் இது சமண மலை என்று இப்பகுதி மக்களால் அழைக்கப்படுகின்றது. அதற்கு முன்பு எண்பெருங்குன்றங்களில் ஒன்றான 'திருவுருகம்' என்ற பெயரில் அழைக்கப்பட்டுள்ளது. இங்கிருந்த சமணப்பள்ளி 'மாதேவிப் பெரும்பள்ளி' என்ற பெயரில் விளங்கியுள்ளது. இம்மலையைச் சார்ந்த பழமையான ஊராகக் குயில்குடி இருந்தது. இதுவே தற்போது கீழக்குயில்குடி, மேலக்குயில்குடி என்று இரண்டு ஊர்களாக இருந்து வருகிறது. கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சமணமலைக் கல்வெட்டில் இதன் பெயர் "குயிற்குடியான அமிர்தபராக்கிம நல்லூர் என்று குறிப்பிடப்படுகிறது. அமிர்தபராக்கிரமன் என்ற பெயர் முற்காலப் பாண்டிய மன்னர்க்குரிய பெயராகும்.

குயிற்குடியும் அதனைச் சார்ந்த பகுதிகளும் "நாட்டாற்றுபுறம்" என்ற நாட்டுப் பிரிவில் இருந்துள்ளன. மாடக்குளத்தின் பாசனக்கால் போக்கில் இவ்வூர் இருந்தமையால் மாடக்குளக்கீழ் நாட்டாற்றுப்புறத்துக் குயில்குடி எனப்பட்டது. சமணமலை முதல் குன்றின் உச்சியிலுள்ள கட்டடக் கோயிலில் கண்டறியப்பட்ட கல்வெட்டில் இம்மலைக்குரிய பெயர் "திருவுருகம்" என்றும் இம்மலையில் இருந்த பள்ளியின் பெயர் மாதேவிப் பெரும்பள்ளி என்றும் அறியமுடிகிறது. சமணத் திருவுருவங்களின் இருப்பிடமாய் (திரு + உரு + அகம்) இம்மலை திகழ்ந்தமையால் திருவுருவகம் என்று பெயர் பெற்றிருக்க வேண்டும். இம்மலையில் பராந்தக வீரநாராயணன் (கி.பி.860-905) காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட இப்பள்ளி அவனது மனைவியான வானவன் மாதேவியின் பெயரைக் கொண்டு விளங்கி உள்ளது.

சங்க காலத்திற்குப் பிறகு திகம்பரப் பிரிவைச் சார்ந்த சமணர்கள் இக்குகைத் தளங்களில் வாழ்ந்தனர். கி.பி. 7-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் இப்பள்ளி பெருவளர்ச்சி அடைந்தது. கி.பி. 8-ஆம் நூற்றாண்டிற்கும் 13-ஆம் நூற்றாண்டிற்கும் இடையில் இப்பள்ளி வெறும் துறவிகளின் உறைவிடமாக மட்டுமல்லாமல் திருவுருங்களைச் செய்வித்து வழிபட்ட சமணர்களின் வழிபாட்டுத் தலமாகவும்

மாறியது. இதனால் இல்லறத்தினைப் பின்பற்றிய சாவகர்கள் இம்மலைக்கு அதிக அளவில் வந்தது சென்றனர். இக்குன்றங்களில் இருந்த துறவியரும் அவர்களது மாணவர்களும், இம்மலைக்கு வந்து சென்ற இல்லறத்தாரும் பல தீர்த்தங்கரர் திருமேனிகளையும் இயக்கியர் உருவங்களையும் புடைப்புச் சிற்பங்களாக இங்குள்ள பாறைகளில் செய்வித்து உருவ வழிபாட்டை வளர்த்தனர். இதனால் இம்மலையில் அழகிய பல சமணத் திருவுருவங்களைக் காணமுடிகின்றது.

பராந்தக வீரநாராயணன் முதலிய பாண்டிய அரசரின் ஆதரவில் கீழக்குயில்குடியைச் சார்ந்த சமண மலைக்குன்றின் உச்சியில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் கல்லாலான பெரிய தீர்த்தங்கரர் கோயில் ஒன்று எடுக்கப்பட்டு இருக்கிறது. அதன் பின்னர் இக்கோயிலும், அதனைச் சார்ந்த சமணமலைப் பள்ளியும், "மாதேவிப் பெரும்பள்ளி" என்று அழைக்கப்பட்டன. இப்பள்ளியின் வரலாற்றில் ஏற்பட்ட முக்கிய நிகழ்வு இதுவாகும்.

மாதேவிப் பெரும்பள்ளி கி.பி. 9-ஆம் நூற்றாண்டிலிருந்து தொடர்ந்து மூன்று நூற்றாண்டுகள் சமணத் துறவிகளும் அவர்களது மாணவர்களும் நிறைந்த சமணக் கல்லூரியாகவும் இருந்துள்ளது. முற்காலப் பாண்டியர் காலத்தில் இப்பள்ளியின் புகழ் தென்னிந்தியா முழுவதும் பரவியிருந்தது. இதனால் திகம்பர சமணத்தின் மூல சங்கமாக விளங்கிய கர்நாடகத்தின் சிரவணப் பெள்கோளாவிலிருந்து துறவிகள் பலர் இப்பள்ளிக்கு வந்துள்ளனர். மடம் ஒன்றையும் தோற்றுவித்து இருக்கின்றனர்.

சமண முனிவர்களின் வாழ்விடமாகவும் சமணர்களின் வழிபாட்டுத் தலமாகவும் சமணக் கல்லூரியாகவும் விளங்கிய சமணமலைப் பள்ளிக்கு அரசர்கள் மட்டுமின்றி இப்பகுதியில் இருந்த நாட்டாற்றுப்புறத்து நாட்டவையினரும் குயில்குடி ஊரவையினரும் ஆதரவளித்துப் போற்றியுள்ளனர். முற்காலப் பாண்டியர் காலத்தில் பெருஞ்செல்வாக்குடன் திகழ்ந்த வேளாண் சமூக நிலவுடைமையாளர்களான நாட்டாரும், ஊராரும் இப்பள்ளிக்கு ஆதரவளித்துக் காத்துள்ளது இப்பள்ளியின் நிலையான வளர்ச்சிக்கு வழிகோலியது. பிற சமயத்தவரிடமிருந்து சமணத்தினைக் காத்தது.

## செட்டிப்பொடவு

சமண மலையின் தென்மேற்குப் பக்கத்தில் கீழக்குயில்குடியின் அருகில் செட்டிப்பொடவு என்னும் குகை இருக்கிறது. இந்தக் குகையின் இடதுபுறத்தில் ஒரு தீர்த்தங்கரரின் உருவம் பாறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வுருவம் பார்ப்பதற்கு ஒரு செட்டியார் போலத் தெரிவதால் இவ்விடத்திற்குச் செட்டிப்புடவு எனப் பெயர் வழங்கப்படுகிறது. இந்த உருவத்தின் கீழ் வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. இந்த எழுத்து வடிவம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. குகையின் உள்ளே அரை வட்டமாகக் குழிந்த கூரை அமைந்துள்ள பாறையில் தனித்தனியாக ஐந்து உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. முதல் உருவம் நான்கு கைகளையுடைய இயக்கி உருவம். சிங்கத்தின் மேல் அமர்ந்து ஒரு கையில்

வில்லையும் மற்றொரு கையில் அம்பையும் ஏனைய கைகளில் வேறு ஆயுதங்களையும் பிடித்திருக்கிறது. இந்த இயக்கிக்கு எதிரில் யானையின் மேல் அமர்ந்துள்ள ஆண் உருவம் கையில் வாளையும் கேடயத்தையும் பிடித்திருக்கிறது. இது சாஸ்தா உருவம் போலும். இதையடுத்துத் தனித்தனியே மூன்று தீர்த்தங்கரர்களின் உருவங்கள் முக்குடைகளுடன் செதுக்கப்பட்டுள்ளன. இந்தத் திருமேனிகளின் வரிசையில் பத்மாவதி என்னும் இயக்கியின் உருவம் வலது காலைத் தொங்கவிட்டு இடது காலை மடக்கிச் சுகாசனத்தில் அமர்ந்திருப்பது போல் செதுக்கப்பட்டுள்ளது. இந்த ஐந்து சிற்பங்களில் நடுவில் உள்ள மூன்று தீர்த்தங்கரரின் உருவங்களுக்குக் கீழ் பின்வரும் நான்கு வட்டெழுத்துச் சாசனங்கள் எழுதப்பட்டுள்ளன.

1. . . . . வெண்புணாட்டுக்குறண்டி திருக்காட்டாம் பள்ளி கனகனந்திப்படாரர்
   அபினந்தனபடாரர் அவர் மாணாக்கர் அரிமண்டலப்படாரர்
   அவினந்தனப் படாரர் செய்வித்த திருமேனி
2. ஸ்வஸ்திஸ்ரீ இப்பள்ளியுடைய குணசேனதேவர் சட்டன தெய்வ
   பலதேவர் செய்விச்ச திருமேனி
3. ஸ்வஸ்திஸ்ரீ வெண்புணாட்டுக் குறண்டித் திருக்காட்டாம்
   பள்ளிக் குணசேனதேவர் மாணாக்கர் வர்தமானப் பண்டிதர்
   மாணாக்கர் குணசேனப் பெரியடிகள் செய்வித்த திருமேனி
4. ஸ்வஸ்திஸ்ரீ இப்பள்ளி ஆள்கின்ற குணசேனதேவர் சட்டன்
   அந்தலையான் களக்குடி தன்னைச் சார்த்தி செய்வித்த
   திருமேனி.

மேற்கண்ட கல்வெட்டுகளின் மூலம் நந்திகணம் சேனகணம் ஆகிய இருவகை சமணத் துறவியர் இங்கு வாழ்ந்தனர் என்பது தெரிய வருகிறது. குறண்டி திருக்காட்டாம்பள்ளி என்ற ஒரு சமணப்பள்ளி இன்றைய அருப்புக்கோட்டை சாலையில் ஆவியூருக்கு அருகில் அமைந்திருப்பது அப்பள்ளியோடு சமணமலைப் பள்ளிக்கு நெருக்கமானத் தொடர்பு இருந்தது என்பது அறியப்படுகிறது. ஆசிரியர்களும், மாணாக்கர்களும் இங்குத் தங்கி சமயக் கல்வி பெற்றிருக்கின்றனர்.

2

# தாய் தெய்வ சுடுமண் உருவங்கள் – பூம்புகார்

**கோ. முத்துசாமி**
கல்வெட்டாய்வாளர், பூம்புகார்

பூம்புகார் இன்று ஒரு சிறு கிராமமாக உள்ளது. இவ்வூர் சங்ககாலத்திற்கு முன்பாகவே சோழ மன்னர்களின் தலைநகரமாகவும் பார் புகழும் சிறந்ததொரு துறைமுகப்பட்டினமாகவும் விளங்கியுள்ளது.

பூம்புகாரின் பெருமையைச் சங்க இலக்கியங்களும் காப்பியங்களும், மூவர் பாடிய தேவாரமும், வெளிநாட்டவரின் பயணக் குறிப்புகளும் மேம்பட எடுத்துரைக்கின்றன.

மேலும் இந்திய அரசின் தொல்லியல் துறையும் தமிழக அரசின் தொல்லியல் துறையும் பூம்புகார் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பல இடங்களில் நில அகழாய்வு செய்து பல அரிய தொல்பொருட்களைக் கண்டெடுத்து காட்சிக்கு வைத்துள்ளன. தமிழக அரசு தொல்லியல் துறை பூம்புகார் கடலின் கிழக்கே 5 கி.மீ. தூரம் வரை கோவா தேசிய கடலாய்வு நிறுவனத்தின் உதவியுடன் 70 அடி ஆழம் வரை கடலின் அடியில் சென்று ஆய்வு செய்து அரிய தொல்பொருட்களை வெளிக் கொணர்ந்துள்ளது. கடலில் ஒரு கட்டடத்தின் அடிப்பகுதி நீண்ட சுவர் பெருங்கற்களுடன் இருப்பதையும் உறுதி செய்துள்ளனர்.

இவை பூம்புகார் கடல் ஆய்வு அகழ்வைப்பகத்தில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

## சுடுமண் உருவத்தின் அமைப்பும் கிடைத்த இடமும்

பூம்புகார் ஊரின் கிழக்கில் 5 கி.மீ. தூரத்தில் கடலில் அமைந்துள்ளது. "கரையப்பார்" எனும் இடமாகும். இந்த இடத்தில் அரை வட்ட வடிவில் ஒரு கட்டடத்தின் நீண்ட அடிச்சுவர் பகுதி உள்ளது. இங்கு மேலும் சிதைந்து விழுந்த கட்டடத்தின் சுவர் பகுதிகளும் ஆங்காங்கே காணப்படுகின்றன. என கடலாய்வு நிறுவனத்தினர் குறிப்பிட்டுள்ளனர். எனவே இப்பகுதி 1) ஒரு கோயிலா? 2) அரண்மனையின் பகுதியா? 3) புத்தவிகாரமா? என்று தொடர்ந்து ஆய்வு செய்து வருகின்றனர்.

இப்பகுதியில் மீன் பிடிக்கும்போதுதான் ஒரு சுடுமண் உருவம் கிடைத்துள்ளது. அது சுமார் 50 அடி ஆழத்தில் இருந்து கிடைத்துள்ளது.

இந்த சுடுமண் உருவம் மிகக் கெட்டியான களிமண்ணால் செய்து சுட்டெடுக்கப்பட்டுள்ளது. இது மிகவும் உறுதியாகவும், நேர்த்தியாகவும் செய்யப்பட்டுள்ளது. நீண்ட காலமாகக் கடலில் கிடந்ததால் சற்று தேய்ந்து காணப்படுகிறது. மிகத் தொன்மையான இவ்வுருவம், "தாய் தெய்வ வழிபாட்டின்" நிலைமையை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

பழங்காலத்தில் குழந்தை ஈன்ற தாய் தனது மடியில் வைத்து அணைத்துக் கொண்டு அமர்ந்து பால் ஊட்டும் நிலையில் இவ்வுருவம் உள்ளது.

## சுடுமண் சிற்பத்தின் அமைப்பு

தாய் தனது குழந்தையை இடுப்பில் வைத்து அமர்ந்து பாலூட்டும் நிலை. தலையில் தாழ்சடை கற்றை, அகன்ற தலை, பரந்த முகம், காதுகளில் பத்ரகுண்டலங்கள் அணி செய்கிறது. வலது காலை இடது பக்கவாட்டில் மடித்து வைத்தும், இடது காலை மடித்துக் குத்திட்டு குழந்தைக்கு அணைவாக வைத்தும் உள்ளார். இடது கை குழந்தையைக் கவ்விப் பிடித்துள்ளது. வலது கை குழந்தையின் முகத்தை மார்பகம் மீது வைத்து இயற்கையாகப் பாலூட்டும் தன்மையில், இந்தத் தாய் தெய்வ வடிவ சிற்பம் மிக நேர்த்தியாக வழங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| உருவத்தின் அகலம் | - | 10.5 செ.மீ. |
| உயரம் | - | 14 செ.மீ. |
| எடை | - | 700 கிராம் |

## குறியீடு எழுத்துகள்

சிற்பத்தின் அடிப்பகுதியில் இடது பக்கம் சில குறியீடு எழுத்துகள் காணப்படுகின்றன. இவை தமிழ் பிராமிக்கு முந்தைய வடிவமாக இருக்கலாம். சிற்பம் நீண்ட காலமாக கடலில் கிடந்ததால் எழுத்துகள் தேய்ந்துள்ளன.

## தாய் தெய்வ வழிபாட்டின் தொன்மை வரலாறு

பழந்தமிழர்கள் ஆரம்ப காலத்தில் இயற்கை வழிபாடு செய்து வந்துள்ளனர். சூரியன், மழை, மரம், பாம்பு, பசு இவை வழிபாட்டில் முக்கிய இடம் பிடித்துள்ளன. ஆனால் இவைகளுக்கு முன்பாக தாய் தெய்வ வழிபாடுதான் முதலிடம் பெற்றிருந்தது என தொல்லியல் அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஈன்றெடுத்த குழந்தைக்கு தாய் தான் பாலூட்டி, அன்பும் பாசமும் காட்டி வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறார். தன்னை இவ்வுலகுப்பு அறிமுகப்படுத்தியவர் தாய்தான் என்பதை உணர்ந்த ஆதிகால தமிழ் மக்கள் "தாய் தெய்வ உருவம் - செய்து வழிபாட்டில் முதல் இடத்தில் கடைபிடித்துள்ளனர் என்பது தெரிகிறது.

எனவே ஓவியங்களிலும், சுடுமண் பொம்மையிலும் கருங்கற் சிற்பத்திலும், தாய் தெய்வ உருவமே முதலிடம் பெறுகிறது. மிகத் தொன்மையானதாகவும் கருதப்படுகிறது.

## தமிழகத்தில் தாய் தெய்வம் கிடைத்துள்ள இடங்கள்

1) திருக்கோயிலூர், 2) திருக்காம்புலியூர், 3) கரூர் அருகேயுள்ள மண்மங்கலம், 4) பூம்பகார் அருகே மேலையூர், 5) மேலப்பெரும்பள்ளம், 6) மோதூர் போன்றே இடங்களில் தாய் தெய்வ சுடுமண் உருவங்கள் கிடைத்துள்ளன.

மேலும் பூம்புகார் அருகேயுள்ள பல்லவனீஸ்வரம் கோயிலில் குழந்தை முருகனுடன் உமாதேவியார் அமர்ந்துள்ள செப்புத் திருமேனி காட்சி தருகிறது. இது பல்லவர் கால கலைநயத்துடன் காணப்படுகிறது. திருநெல்வேலிக்கு அருகில் உள்ள கொற்கையில் குழந்தையை மடியில் வைத்துள்ள கற்சிற்பமும் காணப்படுகிறது. இது கி.பி. 14-ஆம் நூற்றாண்டாகும். இவ்வாறு தாய் தெய்வ வழிபாட்டிற்கு சிறப்பும் செய்யும் நிலையில் தமிழகத்தில் ஆங்காங்கே பலச் சான்றுகள் உள்ளன.

## சமயங்களில் தாய் தெய்வ வழிபாடு

தாய்க்கு முன்னுரிமையும் மேன்மையும் அளிக்கும் வகையில் சைவ சமயம் மட்டுமின்றி பௌத்தம், சமணம் போன்றவற்றிலும் இவ்வரிபாடு முக்கியத்துவம் பெற்றுள்ளது எனலாம்.

புத்தசமயத்தில் ஹாரத்தி (Harithi) என்ற பெயரில் பெண் தெய்வம் வழிபாட்டில் இருந்து வருகிறது. குழந்தையை இடுப்பில் வைத்துள்ளது போல் அதன் உருவ அமைப்பு விளங்குகிறது. இதுவும் தாய் தெய்வ வழிபாட்டில் ஒரு அங்கமாகும்.

சமண சமயத்தில் யக்ஷி அம்பிகா என்ற பெயரில் தாய் தெய்வம் வழிபாட்டில் இருந்து வருகிறது உணரத் தக்கதாகும்.

சைவ சமயத்தில் கிராம தெய்வங்களில், பேய்ச்சியம்மன் வழிபாடு தொன்று தொட்டு இருந்து வருகிறது. குழந்தையை தீயசக்திகளிடமிருந்து காப்பாற்ற வேண்டி கையில் குழந்தையை ஏந்தி நிற்கும் நிலையில் தாய் தெய்வ வழிபாடு உணர்த்தும் பெரிய சுடுமண் உருவங்கள் பல இடங்களில் காணப்படுகின்றன.

குழந்தைச் செல்வம் நிறைய கிடைக்க வேண்டும், மகப்பேறு சிரமம் இன்றி நடைபெற வேண்டும் என்றவற்றைக் கருத்தில் கொண்டு அமைக்கப்பட்டது. "சன்னராயி அம்மன்" கோயிலாகும். பிற்கால சோழர் கலையில் தனியம்மன் கோயிலாகக் கும்பகோணத்தில் இக்கோயில் ஒன்று இன்றும் வழிபாட்டில் உள்ளது. இங்கு குழந்தை வரம் வேண்டி பெண்கள் வழிபாடு செய்வது மரபாக உள்ளது. இதுவும் தாய் தெய்வ வழிபாட்டில் ஓர் அங்கமாகக் கருதப்படுகிறது.

தொன்மையான நாட்டுப்புற வழிபாட்டில் குப்பத்தியம்மன் என்ற பெயரிலும் சங்க காலத்திலிருந்து தாய் தெய்வம் இடம் பெற்றுள்ளதும் தெரிகிறது.

தமிழகத்தில் பல இடங்களில் அகழாய்வுகள் நடந்துள்ளன. பெரும்பாலான இடங்களில் முதுமக்கட்தாழிகளும் சில இடங்களில் புதிய கற்கால கைக்கோடரிகளும் கிடைத்துள்ன. பூம்புகார் அருகில் மேலப்பெரும்பள்ளம் என்ற ஊரில் கிடைத்த முதுமக்கட் தாழியின் வெளிப்பகுதியில் வயதான நிலையில் ஒரு தாயின் உருவமும், மற்றொரு தாழியில் குழந்தை பெற்ற பருவ நிலையில் ஒரு தாயின் உருவமும் பதித்து வனையப்பட்டுள்ளது. இவை இறந்த பின்பும் பெண்மைக்குத் தரப்படும் முக்கியத்துவம் என்று உணர முடிகிறது.

இவை பெருங்கற்காலத்தின் ஆரம்பம் என்றும் புதிய கற்காலத்தின் இறுதிப்பகுதி என்றும் வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

### தாய் தெய்வ சுடுமண் சிற்பத்தின் சிறப்பு

பீடத்துடன் அமர்ந்த நிலையில் நேர்த்தியாகவும், கெட்டியாகவும் மிகத் தேர்ந்த மண்ணீட்டாளர் இதனை வடிவமைத்துள்ளார்.

தொன்மைச் சிறப்புமிக்க பூம்புகாருக்குக் கிழக்கே கடலில் 4 கீ.மீட்டரில் கிடைத்துள்ளது.

பூம்புகார் கடலில் அரைவட்ட வடிவில் காணப்படும் கட்டடப் பகுதி கோயிலா, புத்த விகாரமா, அரண்மனையா என்ற ஆய்வில் உள்ளது. ஆனால் அப்பகுதி கி.மு. 6-ஆம் நூற்றாண்டு என்று முன்னாள் இயக்குநர் திரு. நடன. காசிநாதன் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். அந்த பகுதியில் தான் இந்த சிற்பமும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இந்த தாய் தெய்வ உருவத்தின் பின்பகுதியைப் பார்த்தால் இது ஒரு புதிய கற்கால கைப்கோடாரியின் அமைப்பில் வனையப்பட்டுள்ளதும் தெரிகிறது.

காவிரியாறு கடலில் கலக்கும் பகுதியில் அழிந்த பூம்புகாரின் தொன்மையான இடத்தில் இச்சிற்பம் கிடைத்துள்ளது.

எனவே பூம்பகார் கடலில் கிடைத்துள்ளன தொன்மையான இந்த சுடுமண் சிற்பம் தமிழர் வழிபாட்டில், "தாய் தெய்வம்" என்ற பெயரில் சிறப்பிடம் பெற்று விளங்கியுள்ளது என்பதும், பூம்புகார் நாட்டில் மண்ணீட்டாளர் பலர் சிறந்த கைவினைஞர்களாக விளங்கியுள்ளனர் என்பதும் தெரிய வருகிறது.

### கடலில் இருந்து கண்டெடுக்கப்பட்ட தாய் தெய்வ உருவத்தின் காலம்


உறுதியுடனும், நுட்பத்துடன் இந்த "தாய் தெய்வ உருவ சுடுமண் சிற்பம்" காணப்படுகிறுது. நீண்ட காலமாக இவ்வுருவம் பெரிய கற்களுக்கிடையே கட்டடங்களில் இடிபாடுற்ற பகுதியில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப காலத்தில் தமிழர்கள் மலை முகடுகளிலும், திரைச் சீலைகளிலும் ஓவியங்களைத் தீட்டியுள்ளனர். அதன் பின்னர்தான் களிமண்ணால் உருவங்களைச் செய்து காவி வண்ணம் பூசி தீயிலிட்டு சுட்டு எடுத்து வழிபாட்டில் இடம் பெறச் செய்துள்ளனர் என்பதும் வரலாற்று ஆய்வாளர்கள் மூலம் தெரிய வருகிறது.

எனவே பூம்புகார் நிலப்பகுதியில் இருந்து 5 கி.மீ. தூரத்தில் சுமார் 50 அடி ஆழத்தில் இருந்து இந்த "தாய் தெய்வ உருவம் பதித்த சுடுமண் உருவச் சிற்பம்" கிடைத்துள்ளது. கடல் சீற்றத்தினால் பூம்புகார் கிழக்குப் பகுதி கடலில் கடலில் மூழ்குவதற்கு முன்பே இந்த சிற்பம் வழிபாட்டில் இடம் பெற்றுள்ளது. தமிழர் வழிபாடு, பௌத்தர்கள் வழிபாடு இரண்டிலும் தாய் தெய்வம் முக்கிய இடம் பெற்றிருந்தது என்பதையும் ஆய்வில் கொண்டு பார்க்கும்போது இந்த சிற்பம் கி.மு. 4-5 நூற்றாண்டு காலத்தின் சின்னம் என்பது உணர முடிகிறது.

கட்டுரை சிறப்பாக அமைய உதவியவர்கள்

1. பூம்புகார் அகழாய்வும் கடலாய்வும் - திரு. நடன. காசிநாதன்,முன்னாள் இயக்குநர்
2. திரு. கி. ஸ்ரீதரன், துணை இயக்குநர், ஓய்வு
3. முனைவர். திருமதி. சீ. வசந்தி, பதிவு அலுவலர், சென்னை
4. திரு. எஸ். செல்வராஜ், தொல்லியல் அலுவலர், தஞ்சாவூர்
5. புலவர். திரு. நா. தியாகராசன், மேலப்பெரும்பள்ளம்



# 3

# செக்கார் வணிக சமூகம் – ஓர் வரலாற்றுப் பார்வை

**நாக. கணேசன்**

சிறப்புநிலைக் காப்பாட்சியர், கரூர்

வரலாறு என்பது தற்செயலாக நிகழும் சம்பவங்களின் நிகழும் தொகுப்பன்று. சமுதாயத்தில் ஏற்படும் வளர்ச்சிகளும் மாற்றங்களும் சில திட்டவட்டமான நியதிக்கேற்ப அமைவதாகும். அது சமூக மாற்றங்களின் வளர்ச்சிப் போக்கினை அறிய உதவும் விஞ்ஞானம். மக்களின் வாழ்க்கை ''மாற்றம் ஒன்றே மாறாதது' - என்ற சமூக இயக்கவியல் நியதிக்கேற்ப் காலத்திற்கு காலம் வளர்ச்சியையும் மாற்றத்தையும் பெற்று வந்துள்ளதை வரலாற்றில் காணலாம். மக்களின் வாழ்க்கைத் தேவையின் அடிப்படையில் தொழிலும் தொழிலைச் சார்ந்த கருவிகளும் உருவாக்கப்பட்டன. கால மாற்றத்தின் பொழுது சமூதாயத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் பல படிநிலைகளையும், ஏற்றத்தாழ்வுகளையும், முரண்பாடுகளையும் உருவாக்கின.

உயிர் வாழ்வதற்காக உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருட்களில் உபரி உற்பத்தியை எதிர்கால தேவைக்கு சேமித்தபொழுது மிகுந்த சேமிப்பைக் கொண்டோர் உடமையாளராகவும், சேமிப்பு இல்லாதோர் உடமையற்றவராகவும் விளங்கினர். உற்பத்தி கருவிகளை உடமையாகப் பெற்றவர்கள் செல்வந்தர்களாகவும், உற்பத்தி கருவிகளை உடமையாகப் பெறாதவர்கள் வறியவர்களாகவும் காணப்பட்டனர். மக்கள் தேவையின் நிர்பந்தத்தால் உருவான தொழில்கள் பிறகு பொருளீட்டும் அமைப்பாக உருமாறியது. இத்தகைய வளர்ச்சியும் முரண்பாடும் அனைத்து தொழிற்குடிகளிலும் காணப்பட்டன. இத்தகைய போக்கு பிற்காலத்தில் தொழிற் சார்ந்த சாதீய கட்டமைப்புகளாக வளர்ச்சிப் பெற்றன.

செக்குத் தொழில் மேற்கொண்டார் செக்கார் என்றும், பறை அடிக்கும் தொழிலை மேற்கொண்டோர் பறையர் என்றும், வேளாண் தொழில் மேற்கொண்டோர் வேளாளர் என்றும், தொழில் சார்ந்த சாதீயப் பெயர்களால் மக்கள் அடையாளப்படுத்தப்பட்டனர். உடைமையாளருக்கும் உடைமையற்றவர்களுக்கும் இடையே நிலவிய முரண்பாட்டுக் கூர்மையைவிட தொழிற்குடிகளாக இருந்து சாதீய கட்டமைப்பாக உருமாறிய தொழிற் சாதிகளுக்கிடையே நிலவிய முரண்பாட்டுக் கூர்மை கடுமையாகக் காணப்பட்டது. இதன் உச்சகட்ட நிலையினை கி.பி.13-ஆம் நூற்றாண்டிற்குப்பின் தமிழ்நாட்டு வரலாற்றில் அதிகம் காணலாம்.

சாதீயக் கட்டமைப்புகள் வலுப்பெற்று அதன் காரணமாக தொழிற் குடிகளில் நிலவிய பொருளாதார ஏற்றத்தாழ்வுகளின் முரண்பாடடு வளர்ச்சிப் போக்கு தடுக்கப்பட்டுள்ளதை வரலாற்றில் காணமுடிகிறது. இதனால் தொழிற்குடிகளில் காணப்பட்ட பொருளாதார ஏற்றத்தாழ்வு முரண்பாட்டுக் கூர்மையைவிட சாதீயக் கட்டமைப்புகளுக்கிடையே நிலவிய ஏற்றத்தாழ்வு முரண்பாட்டுக் கூர்மை வலுவாகக் காணப்பட்டது. செக்கார் சமூகத்திலும் இத்தகைய நிகழ்வு போக்குகள்தான் காணப்பட்டன. இவற்றைக் கல்வெட்டுகளும் இலக்கியங்களும் உறுதி செய்கின்றன.

தொடக்கக் காலத்தில் நாட்டின் வளர்ச்சி வேளாண் உற்பத்தியைப் பெரிதும் சார்ந்திருந்தது. பண்டமாற்றுமுறை படிப்படியாக குறைந்து அனைத்து பொருட்களையும் பணத்தைக் கொண்டு வாங்க முடியும் என்ற நிலை ஏற்பட்ட பொழுது வணிகம் வளர்ந்து வேளாண் தொழிலுக்கு போட்டியாக உருவெடுத்தது வணிகர்கள் செல்வந்தர்களாகவும், நிலவுடைமையாளருக்குப் போட்டியாகவும் வளர்ச்சிப் பெற்றனர். நிலவுடைமை சமூதாயமும், வணிக சமுதாயமும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட வடிவங்களையும், வளர்ச்சிப் போக்கினையும் கொண்டவையெனினும் பண்டைய காலத்தில் ஒன்றையொன்று சார்ந்திருந்தன. வேளாண் தொழிலில் அரசின் பங்களிப்பும் செல்வாக்கும் அத்தொழில் வளர்ச்சிக்கு பெரிதும் உதவின. வேளாண் தொழில் வளர்ச்சி பெற்றபொழுது தச்சர், கொல்லர், செக்கார், நெசவாளர் போன்றோர் மேற்கொண்ட வேளாண்மை சார்ந்த தொழில்களும் வளர்ச்சிப் பெற்றன. இக்கால கட்டத்தில் வேளாண் தொழிலைப் போன்று செக்குத் தொழிலும் மக்களின் அடிப்படைத் தேவையை நிவர்த்தி செய்யும் தொழிலாகக் கருதப்பட்டுள்ளது. இத்தகைய நிகழ்வுப் போக்கு கி.பி.10-ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் அதிகமாக காணப்பட்டது.

உடல் நலம் காக்கும் உணவாகவும் இருள் நீக்கி ஒளி தரும் பொருளாகவும் எண்ணெய்யை அறிந்த மக்கள் அதனை உற்பத்தி செய்வதற்கு உருவாக்கிய கருவியே செக்கு எனப்படும். செக்கில் எண்ணெய் ஆட்டும் தொழிலை மேற்கொண்டவர்கள் செக்கார் என்றழைக்கப்பட்டனர். செக்கார் எண்ணெய் வணிகம் மேற்கொண்ட வணிக சமூகத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் செக்காலியர், செக்காட்டி, செக்கான், செக்காத்தி, செக்கு வாணியர், ஜோதி நகரத்தார், திருவிளக்கு நகரத்தார், சங்கரப்பாடியார் என்று அழைக்கப்பட்டுள்ளனர். செக்கார் வாழ்ந்த இடம் செக்காலைச்சேரி என்றும் செக்குகளிருந்த இடம் செக்குமேடு, செக்காலை, செக்கடி, செக்கடிமேடு என்றும் அழைக்கப்பட்டுள்ளன.

"அவனி நாராயண பெருந்தெருவிற்
செக்கார் ஒழுகைக்கு மேற்கும். . . "-
"செக்காலைச்சேரி இருபதின் கழஞ்சு
பொன் குடுத்து . . ."- என்ற கல்வெட்டுத் தொடர்களும்,
"தயில வினைத் தொழில் மரபில்
சங்கரப்பாடி தெருவு . . . .

என்ற பெரியப்புராண அடிகளும் செக்கார் வாழ்ந்த இடங்களைப் பற்றி குறிப்பிடுகின்றன. செக்காரில் ஊரின் தேவையையும் கோயிலின் தேவையையும் பூர்த்தி செய்தவர்கள் செக்காலைச் சேரியிலும், செக்கிலிருந்து எடுக்கப்பட்ட எண்ணெய்யைப் பிற இடங்களுக்குப் கொண்டுச் சென்று வணிகம் மேற்கொண்டவர்கள் நகரம் அல்லது மணிக்கிராமத்திலும் வாழ்ந்துள்ளனர்.

சங்க இலக்கியங்களில் செக்கார் பற்றிய செய்தி அதிகம் காணப்படவில்லையெனினும் சிலப்பதிகாரத்தில் 'ஓசுநர்' என்ற எண்ணெய் வணிகர்கள் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. கி.பி.4-5-ஆம் நூற்றாண்டிற்குப்பின் இம்மக்களைப் பற்றிய செய்தி கல்வெட்டுகளிலும் இலக்கியங்களிலும் அதிகம் காணப்படுகின்றன. திருவாய்மொழியிலும், திருத்தொண்டர் திருவந்தாதியிலும், பெரியபுராணத்திலும், நாலடியாரிலும், பிங்கல நிகண்டிலும், காளமேகப்புலவர் பாடிய பாடலிலும், ஜெயங்கொண்டார் பாடலிலும் செக்கு பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. மக்களின் அடிப்படைத் தேவையான உணவு, உடை, உறையுள் ஆகியவற்றிற்கு அடுத்தப்படியாக செக்குத் தொழிலும் கருதப்பட்டுள்ளது. எண்ணெய்யின் தேவையும் பயன்பாடும் மக்களின் அன்றாட வாழ்வில் அவசியமானதால் மக்களின் அடிப்படைத் தேவையை நிவர்த்தி செய்யும் உற்பத்திக் கருவிகளுள் ஒன்றாக "செக்கு" இருந்துள்ளது. அதனால் ஊரிருக்கையின் அருகிலும், கோயில்களின் அருகிலும் செக்கினை நிறுவி, ஊர் மக்களின் எண்ணெய் தேவையையும், கோயில்களின் எண்ணெய் தேவையையும் நிவர்த்தி செய்துள்ளனர்.

முதலாம் பராந்தகசோழனின் பதினைந்தாவது ஆட்சியாண்டில் திருவிடைமருதூருக்கருகில் ஐய்யப்பாடி என்ற ஊர் புதிதாக நிர்மானிக்கப்பட்ட பொழுது அவ்வூரில் அமைக்கப்பட வேண்டிய மாளிகை, மரங்கள், பூந்தோட்டங்கள் பற்றி குறிப்பிட்டு இறுதியில் "பெருஞ்செக்கு" நிறுவப்பட வேண்டும் என்று கல்வெட்டில் வலியுறுத்துவதிலிருந்து அக்கால கட்டத்தில் செக்கின் தேவையும் பயன்பாடும் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது.

வேளாண் நிலங்களை உடைமையாகப் பெற்றோர் பெருங்குடிகள், காணியுடையார், நிலக்கிழார், நில உடைமையாளர், உழுவித்துண்போர் என்றும் அவ்வேளாண் நிலங்களில் நேரிடையாக உழைப்பைச் செலுத்தி உற்பத்தி செய்தோர் உழுகுடிகள், உழவர், உழுதுண்போர், உடைமையற்றோர் என்றும் அழைக்கப்பட்டுள்ளனர். இத்தகைய ஏற்றத்தாழ்வான படிநிலையைக் கொண்ட நிலவுடைமை சமூதாய அமைப்பு கி.பி.10-ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் இருந்துள்ளது. இத்தகைய நிலவுடைமை சமுதாய அமைப்பு தொழிற் சார்ந்த சாதீய கட்டமைப்புக்குட்பட்ட நிலையில் அதிக முரண்பாட்டுக் கூர்மையுடன் காணப்பட்டுள்ளது. இத்தகைய படிநிலை ஏற்றத் தாழ்வுகளும் முரண்பாடுகளும் உற்பத்தி சாதனங்கள் உடைமையாகப் பெற்றிருந்த அனைத்து தொழிற்குடிகளிலும் வெளிப்பட்டன.

செக்குத் தொழிலிலும் செக்குகளை உடைமையாகப் பெற்ற செக்குடைமையாளர்களும். செக்குகளில் நேரிடையாக உழைப்பைச் செலுத்தி உற்பத்தி செய்த உடைமையற்ற செக்காரும் இருந்துள்ளனர். நிலங்களை தன் உடைமையாக வைத்திருந்த நிலவுடைமையாளரைப் போன்று செக்கினை உடைமையாக வைத்திருந்த செக்குடைமையாளரும் இருந்துள்ளதை கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. கரூர் மாவட்டம் குளித்தலை வட்டம் கூடலூர் நத்தமேட்டில் கண்டறியப்பட்ட செக்கின் உரல் பகுதியில்,

"ஸ்ரீ பிடாரன் மல்லன் செக்கு"

-என்று பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில் பிடாரன் மல்லன் என்பவன் செக்குக்கு உரியவனாகக் காட்டப்பட்டுள்ளான். இச்செக்கு பிடாரன் மல்லன் என்பவனுக்கு உடைமை யானதாகும். இக்கல்வெட்டின்படி பிடாரன் மல்லனை செக்குடைமையாளனாகக் கருத வாய்ப்புள்ளது. இதனைப் போன்று செஞ்சி வட்டம் ஏம்பலம் என்ற ஊரின் நத்தமேட்டுப் பகுதியில் காணப்படும் செக்கின்மீது,

"ஸ்ரீநொப்பிக்கலி
ஏறாழி மகன்
மாதேவன் செக்கு"- என்று பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில் ஏறாழி என்பவனின் மகன் மாதேவன் என்பவன் செக்குக்குரியவனாகவும், செக்குடைமையாளனாகவும் காட்டப்பட்டுள்ளான். இதனைப் போன்று கருவூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், பழைய ஜெயங்கொண்ட சோழபுரம் நத்தமேட்டிலுள்ள செக்கின் மீது,

"ஸ்ரீவடுகம்பட்டன் தன்னுடைய செக்கு வீசம்பட்டனுக்கு நகர மறிய பேர்பெறு குடுக்க இந்நகரமறி பிடாரியிக்கு திருவிளக்கினுக்கு நீர (க) ட்டிக் குடுத்த(ா)ன் வீசம் பட்டன் இச் செக்கு".

-என்று பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில் "ஸ்ரீவடுகம்பட்டன் தன்னுடைய செக்கு" என்று குறிப்பிடுவதன் மூலம் வடுகம்பட்டன் செக்குடைமையாளன் என்பதை உறுதிப்படுத்தலாம். செக்குடைமையாளனான 'வடுகம்பட்டன் தன்னுடைய செக்கினை தன்பெயர் நிலைத்து நிற்கும் பொருட்டு ஊரார் அறிய அவ்வூர் பிடாரிக் கோயிலுக்கு வீசம்பட்டன் மூலம் தாரை வார்த்துக் கொடுத்துள்ளான். வடுகம்பட்டன் பிடாரிக் கோயிலுக்கு தன் செக்கினை நேரிடையாக வழங்காமல் வீசும்பட்டன் மூலம் தாரை வார்த்து கொடுத்துள்ளதால் 'வீசம்பட்டன்' என்பவன் சங்கரபாடியானாக இருந்திருக்க வாய்ப்புள்ளது. ஏனெனில் கோயில் நிர்வாகத்தில் பங்குபெற்ற சங்கரபாடியாரே கோயில் விளக்குகளுக்குக் கொடைகளைப் பெறும் பணியினையும் அதனைப் பராமரிக்கும் பணியினையும் மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு வடுகம்பட்டனும், வீசம்பட்டனும் செக்குடைமையாளராக இருந்துள்ளனர்.

வடுகம்பட்டன் செக்குடைமையாளன் என்ற நிலையிலிருந்து செக்குடைமையற்றவன் என்ற தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டபொழுது

இந்நிகழ்வுகள் நடந்துள்ளதை கல்வெட்டின் மூலம் அறியமுடிகிறது. வடுகம்பட்டன் தனக்குப் பிறகு செக்கினைப் பராமரிக்க வாரிசில்லா சூழ்நிலையிலோ, வரி செலுத்த இயலாத சூழ்நிலையிலோ, தனது செக்கினை வரிவிலக்குப்பெற்ற பிடாரிக் கோயிலுக்கு வழங்கி அதன் மூலம் தன் புகழ் நிலைக்கும்படி செய்திருக்கலாம். ஆட்சியாளர்கள் வரி செலுத்தாத மக்களிடம் 'மன்கலம்' தகர்ந்து வெண்கலம் பறித்து வரியினைப் பெற்றுள்ளனர். ஆட்சியாளர்களின் கடுமையான வரி விதிப்பிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவும் வரிவிலக்கு சலுகை வழங்கப்பட்ட கோயிலுக்கு செக்கினை வழங்கியிருக்க வாய்ப்புள்ளது.

திருவண்ணாமலைக்கருகில் ஆலையூர் நத்தமேட்டில் காணப்படும் செக்கின்மீது,

"சகர யாண்டு எண்ணூற் றெழுபத்தின் நேழு
வாண கோபாடில் பெந்னை வடகரை
க் காட்டாம் பூண்டியுடைய செக்கிழான்
உலகளந்தான் வீரட்டனி
ட்ட செக்கு இதி ரெட்டினான் தேவனார்
கொரு முறள் யெண்ணை"-

என்று பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில் செக்கிழான் உலகளந்தான் வீரட்டன் என்பவன் செக்கிழான் என்ற சொல்லின் மூலம் செக்குடைமையாளனாகக் காட்டப்பட்டுள்ளான். நிலவுடைமையாளன் நிலக்கிழான் என்று அழைக்கப்பட்டதைப் போன்று செக்குடைமையாளன் செக்கிழான் என்று அழைக்கப்பட்டிருப்பது செக்காரில் செக்குடைமையாளர் இருந்துள்ளதை உறுதிப்படுத்துகின்றது.

செக்குத் தொழில் மீது விதிக்கப்பட்ட வரிகள் அதன் வணிகத் தன்மைக் கேற்ப செக்குக் கடமை, செக்கார்ப்பாட்டம், செக்காயம், செக்கிறை, செக்குக் காணம் போன்ற பெயர்களில் வசூலிக்கப்பட்டுள்ளன. கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் உப்பளங்களில் அரசின் அனுமதிப் பெற்றே உப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. அனுமதி இன்றி உப்பு தயாரிப்பது தண்டனைக்குரிய குற்றமாக கருதப்பட்டுள்ளதென்று கௌடில்யர் தனது அர்த்தசாஸ்திரத்தில் குறிப்பிட்டுள்ளார். பல்லவர் காலத்தில் "உப்புக்கோச்செய்கை" என்ற தொழில் வரியை அரசுக்கு செலுத்திவிட்டு உப்பினை தயாரித்துள்ளனர். இதனைப் போன்றே செக்குத் தொழிலுக்கும் 'செக்கு' என்ற பெயரில் தொழில்வரி வசூல் செய்யப்பட்டுள்ளதை கல்வெட்டில் காணமுடிகிறது. தனியார் செக்குகளை நிறுவிட வாய்ப்பளிக்கப்பட்டபோது செக்கார் சமூகத்திலிருந்த செக்குடைமையாளர்கள் அரசின் அனுமதியினை உரிமக் கட்டணம் செலுத்தி செக்குத் தொழிலை மேற்கொண்டுள்ளனர்.

". . . . . . . . .இருபதின்மர் சதுர்பேதிகளுக்கு பிரம்மதேயமாக கொடுத்து இவ்வூர் மனையும் மனைப்படப்பும் ஊராள்ச்சியும் செக்கும் தறியும் கூலமும் தரகும் கத்திக்காணமும் . . . . . . "

-என்ற கல்வெட்டில் "செக்கும் தறியும்" என்பதில் செக்கு என்பது செக்குத் தொழில் உரிமம் (Licence Fee For Oil Crusher) ஆகும். தறி என்பது நெசவுத் தொழில் உரிமம் (Licence Fee For Textile) ஆகும். கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலும் கி.பி. 7-ஆம் நூற்றாண்டிலும் வசூலிக்கப்பட்ட உப்புத் தொழில் உரிமத்தைக் (Licenxe Fee For Salt Industry) போன்று "செக்கு" என்ற பெயரில் உரிமக் கட்டணத்தைப் பெற்றுக் கொண்டு செக்குத் தொழில் உரிமம் வழங்கப்பட்டுள்ளதை இக்கல்வெட்டின் மூலம் அறியலாம். "செக்கு என்று குறிப்பிடப்படுவது பொதுவாக செக்கிலிருந்து வெளிப்படும் எண்ணெய் மீது இடப்பட்ட வரியாக இருந்தபோதிலும் அது செக்கு இயந்திரங்களை (செக்கு) நிறுவுவதற்கு அரசால் வசூலிக்கப்பட்ட உரிமக் கட்டணமே" என்று டாக்டர் மீனாட்சி குறிப்பிடுவது சரியான கருத்தாகும்.

செக்குடைமையாளர்கள் செக்கிலிருந்து உற்பத்தி செய்த எண்ணெய்யில் செக்காருக்கு வழங்கிய கூலிபோக எஞ்சிய பெரும்பகுதி எண்ணெய்யை செக்கு வாணியர் என்ற பெரும் எண்ணெய் வணிகர்களைக் கொண்டு வணிகம் மேற்கொண்டுள்ளனர். இத்தகைய பெரும் வணிகச் செக்காரே பிற்காலத்தில் உயர்ந்தவர்களாகக் கருதப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஊர் மற்றும் கோயில் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இத்தகைய செக்கார் "சங்கரபாடியார்" என்று அழைக்கப்படுவதைக் கல்வெட்டுகளில் காணலாம். செக்கார் சமூகத்தில் உயர்வு தாழ்வு ஏற்பட்டமைக்கு அச்சமூக மக்களிடையே பொருளுடைமை ஏற்படுத்திய மாற்றமே என்றால் மிகையல்ல. சங்கரபாடியார், வாணியர். மணிக்கிராமத்தார், திசையாயிரத்தைந் நூற்றுவர். அஞ்சுவண்ணத்தார், நானாதேசிகள் போன்ற வணிகக்குழு கோயில் ஆட்சிக் குழுவில் பங்கெடுத்துக் கொண்டன. சங்கரபாடியார் என்ற செக்கார் கோயில் நிர்வாகத்தில் பங்குபெற்றதோடு கோயில் விளக்குகளுக்கு எண்ணெய் வழங்கி, நொந்தாவிளக்களித்து அவற்றைப் பாதுகாக்கும் பணியினையும் செய்தனர். அவ்விளக்குகள் எரிவதற்காகக் கொடைகளைப் பெற்று அக்கொடைகளைப் பராமரிக்கும் பணியினையும் மேற்கொண்டனர்.

"திருக்கோயிலூர் சபையோம் நகரந் திருக்கோயிலூர் சங்கரபாடியோம்"

"திருநெல்வேலிச் சுத்தவல்லிப் பெருந்தெருவிற் சங்கரன்பாடியார் எண்ணெய் அளப்பாராக"

"ஆமூர் கோட்டத்து மாமல்லபுரமாகிய சனனாதபுரத்துச் சங்கரபாடியான் கொள்ளம்பாக்கிழான் மாதேவன் எட்டி வைத்த திருநொந்தா விளக்கொன்று"

-என்ற கல்வெட்டுத் தொடர்கள் இதனைப் புலப்படுத்துக்கின்றன.

"இறைக்குடிகளில் பொன்காணவல்லா ரெனப்படுவாரை நோக்கி மாடவிதியார் கூடிக் குடவொலை எழுதிப் புகவிட்டு தங்கள் செரியில் நால்வரைக் குடவொலையில் பொந்தாரைக் கொள்வதாகவும் இப்பரி சே(னை)யிலும் இருவரைக் கொள்வதாகவும் இப்பரிசெய் சங்கரப்பாடியிலும் மூவரை(க்) கொள்வதாகவும் இவர்களெல்லா ஜனத்துக்கு மொக்க பொன் காண்பா(ர்)களாகவும்"

என்ற கல்வெட்டுத் தொடர்கள் கோயிலுக்கு கொடையாக வழங்கப்பட்ட பொன்னின் தரத்தைச் சோதிக்கும் குழுவில் "சங்கரபாடியார்" இடம்பெற்றிருந்ததை உறுதிப்படுத்துகின்றன. இக்கல்வெட்டுகளின் மூலம் சங்கரப்பாடியார் என்ற செக்காருக்கு அளிக்கப்பட்ட உயர்வையும் மதிப்பையும் அறியலாம். கோயில் நிர்வாக சபையில் காணியுடையாரும், சங்கரப்பாடியாரும் இடம்பெற்றிருந்ததையும், நிலமற்ற உழுகுடிகளும், உடைமையற்ற செக்காரும் அந்நிர்வாக அமைப்பில் இடம்பெறாததையும் நோக்கும்பொழுது சங்கரப்பாடியார் என்போர் நிலவுடைமையாளரைப் போன்று செக்குடைமையாளராக இருந்திருக்க வேண்டும். தானமாகப் பெறப்பட்ட செக்குகளையும், தம்முடைமையான செக்குகளையும் செக்காரிடம் மானியமாகவோ, வாரமாகவோ வழங்கி வரியாக எண்ணெய்யை வசூலிக்கும் பணியினையும் சங்கரபாடியார் மேற்கொண்டதை மேற்காணும் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

கோயில்களுக்கு பொருள் காணிக்கை செலுத்துவதைப் போன்று, "செக்குக் காணிக்கையும்" செலுத்தியுள்ளனர். கருவூர் வட்டம், வெள்ளியனை என்ற ஊரின் நத்தமேட்டுப் பகுதியிலுள்ள செக்கின் மீது

"ஸ்வஸ்திஸ்ரீ சோமூர் மஹா தேவற்க்கு
அஞ்ஞூற்றுவர் இடுவிச்ச
செக்கு"

என்று பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில் சோமூர் கோயிலிலுள்ள இறைவனுக்கு விளக்கெரிப்பதற்காகும் எண்ணெய்யை ஆட்டுவதற்காக வெள்ளியனையிலிருந்த "ஐந்நூற்றுவர்" வணிகக்குழு செக்குகளை செய்து தானமாக வழங்கியதாக பொறிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கோயிலுக்கு கொடையாக வழங்கப்பட்ட செக்குகளை மாநியமாகவோ வாரமாகவோ செக்காரிடம் விட்டு அவர்கள் கோயிலுக்கு வழங்க வேண்டிய எண்ணெய் அளவினை நிர்ணயம் செய்த அதனை காலமுறைப்படி வழங்குவதை கண்காணிக்கும் பணியினையும் கோயில் நிர்வாகத்திலிருந்த "சங்கரபாடியார்" எனும் செக்கார் மேற்கொண்டனர். செக்குகளில் எண்ணெய் ஆட்டுவோரிடமிருந்து "செக்குக்கடமை" என்ற வரி வசூலிக்கப்பட்டுள்ளது. "கடமை" என்பது அரசு அல்லது ஊர் நிலங்களை அளந்து உழவர்களிடம் வாரமாகவோ மானியமாகவோ வழங்கி அதன் விளைவுகளுக்கேற்ப பெற்ற வரியாகும். அவ்வாறு ஊர் பொதுவில் அமைக்கப்பட்ட செக்குகளையோ அரசுக்குத் தேவையான எண்ணெய்யை ஆட்டுவதற்காக அமைக்கப்பட்ட செக்குகளையோ, கோயிலுக்குத் தானமாக வழங்கிய செக்குகளையோ செக்காரிடம் மானியமாகவோ வாரமாகவோ வழங்கி அவர்களிடமிருந்து பெற்ற வரியே "செக்குக்கடமை" ஆகும்.

அரசு ஆடைகளை நெய்த நெசவாளர்கள் செலுத்திய வரி தறிக்கடமையாகும். தறிக்கடமை செலுத்திய நெசவாளர்கள் தறி ஒன்றுக்கு ஆறு பணம் ஆண்டு வரியாகச் செலுத்தியுள்ளனர். செக்காரும் செக்கு ஒன்றுக்கு ஆறு பணம் ஆண்டு வரியாகச் செலுத்தியமை கல்வெட்டுகளின் மூலம் அறியப்படுகிறது.

அவ்வரியை கோயில் மாநியம் என்ற பெயரில் எண்ணெய்யாக கோயிலுக்கு வழங்கிவிட்டு உழைப்பிற்கான ஊதியமாகப் பெற்ற எண்ணெய்யை பண்டமாற்று முறையில் கொடுத்து விட்டு தங்கள் தேவைக்கான உணவுப் பொருட்களை மாற்றாகப் பெற்று வாழ்க்கை நடத்தியுள்ளனர்.

"நாதற் கொளி வளக்கேற்ற குடலிலனாய்க்
கும்பத் தயிலம் விற்றுஞ் செக்குழன்றுங் கொள் கூலியனாய்"

என்று உடைமையற்ற செக்கார் எண்ணெய் ஆட்டும் கூலித்தொழிலாளர்களாக வாழ்ந்துள்ளதை திருத்தொண்டர் திருவந்தாதி குறிப்பிடுவது நோக்கத்தக்கதாகும். எண்ணெய் வணிகம் மேற்கொண்ட சிறு வணிகர்களான செக்கார் சமூக கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு ஒதுக்கப்பட்டவர்களாக பொருளாதாரத்திலும், சமூகத்திலும் தாழ்ந்த நிலையில் இருந்துள்ளனர்.

எண்ணெய் ஆட்டும் தொழிலையும் எண்ணெய் விற்கும் தொழிலையும் மேற்கொண்ட உடைமையற்ற செக்கார் தாழ்ந்தவர்களாகக் கருதப்பட்டதோடு அவர்கள் எதிரே வந்தால் கெட்ட சகுனமாகவும் எண்ணெய் ஆட்டுவதும், எண்ணெய் விற்பதும் பாவமென்றும் அதனை செக்காரே செய்வது தகுமென்றும் கருதப்பட்டுள்ளது. செக்கார் உவச்சோ பறையோ தங்கள் இல்ல நன்மை தீமைகளில் கொட்டிக் கொள்ள கூடாதென்ற சமூகக் கட்டுப்பாடுகளும் இருந்துள்ளன.

"ஸ்ரீகாஞ்சி மாநகரில் செப்பேட்டுப்படி செக்கார் செய்யக் கடவ முறைமை எண்ணைய்யும்
னவயிலே கூறி விற்கக் கடவந் இவனுக்கு உவச்சும் பறையும் கொட்டக் கடவதல்ல
ஒரு துறையில் நிருண்ணக் கடவ னல்லந் . . . . . "
என்ற கல்வெட்டுத் தொடரிலும்,

"செக்கூர்ந்து கொண்டாரும் செய்த பொருளுடையார்

அக்காரம் அன்னார் அவர்க்கு" என்ற நாலடியார் பாடலிலும்,
"ஆடுவதுஞ் செக்கே யளப்பதுவு மெண்ணெயே
கூடுவதுஞ் சக்கிலியக் கோதையே - நீடுபுகழ்க்
கச்சிச் செப்பேட்டிற் கணிக்குங்காற் செக்கார்தாம்
உச்சிக்குப்பின் புகாரூர்"
-என்ற ஜெயங்கொண்டார் பாடலிலும் இக்கருத்து உணர்த்தப்படுகின்றது.

உடைமையாளராக விளங்கிய செக்காரான சங்கரப்பாடியார் சமூகத்தில் உயர்வானவர்களாக கருதப்பட்டு பொறுப்புமிக்க பதவிகளையும் பெற்றுள்ளனர். உடைமையற்ற தொழிலாளர்களாய் வாழ்ந்த செக்கார் தாழ்ந்தவர்களாக

ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளனர். பொருளாதாரத்திலும், சமூக மதிப்பீடுகளிலும் ஏற்றத் தாழ்வான படிநிலைகளைக் கொண்ட செக்கார் சமூகத்தில் சமூகமுரண்பாடுகள் காணப்பட்டன. எனினும் செக்கார் என்ற சாதீய கட்டமைப்பிற்குள் வாழ்ந்துள்ளனர். செக்கார் ஒரே தொழிற் சாதீய கட்டமைப்பிற்குள் வாழ்ந்தாலும் அவர்களிடையே மற்ற தொழிற்குடியைப் போன்று பொருளுடைமையை அடிப்படையாகக் கொண்ட ஏற்றத்தாழ்வுகள் காணப்பட்டதையே மேற்காணும் நிகழ்வுகள் உணர்த்துகின்றன.

வேளாண் தொழிலைப் போன்று செக்குத் தொழிலும் மக்களின் அடிப்படைத் தேவையை பூர்த்தி செய்யும் தொழிலாக விளங்கியது. வேளாண் நிலங்களை போன்று செக்கும் தானப் பொருளாக வழங்கப்பட்டுள்ளது. வேளாண் குடிகளில் காணப்பட்ட சமூகப் படிநிலைகள் செக்குத் தொழிற் குடிகளிலும் நிலவியது. வேளாண் தொழிலைப் போன்று செக்குத் தொழில் நாட்டின் வளர்ச்சியில் முதன்மையிடம் பெறாததால் செக்குத் தொழிற் குடிகளின் படிநிலை ஏற்றத் தாழ்வுகள் வேளாண் குடியில் காணப்பட்டதைப் போன்று கடுமையானதாகக் காணப்படவில்லை.

எனினும் வேளாண் தொழிலில் காணியுடையாரும் உடைமையற்ற உழுகுடிகளும் இருந்ததைப் போன்று செக்குத் தொழிலிலும் செக்குயுடைமையாளரும் உடைமையற்ற செக்காரும் இருந்துள்ளனர். உடைமையை அடிப்படையாகக் கொண்ட ஏற்றத்தாழ்வுகளும், முரண்பாடுகளும், செக்கார் சமூகத்திலும் காணப்பட்டது. அவ்வுடைமையை அடிப்படையாகக் கொண்டு ஒரே தொழிலை மேற்கொண்ட மக்களிடையே பல ஏற்றத்தாழ்வான படிநிலைகள் காணப்பட்டன. அத்தகைய படிநிலை ஏற்றத்தாழ்வுகள் அக்காலத்தில் அனைத்து தொழில்களிலும் அமைந்திருந்ததையே அக்காலக் கல்வெட்டுகளும் இலக்கியங்களும் காட்டுகின்றன. செக்குத் தொழிலில் ஈடுபட்ட செக்கார் சமூகத்திலும் அத்தகைய படிநிலை ஏற்றத்தாழ்வுகள் உடைமையை அடிப்படையாகக் கொண்டே விளங்கியது.

### *துணை நூற்பட்டியல்*


1. தமிழ் நாட்டின் சமூக பொருளியல் வரலாறு , சில குறிப்புகள், மே.து. ராசுகுமார்
2. தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி-19, க.எண்.344
3. தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி-17, க.எண்.588
4. தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி-19, க.எண்.92
5. வரலாற்றில் செக்கு, சு. இராசகோபால், தொல்லியல் துறை, சென்னை
6. கரூர் மாவட்டத்தில் புதிய கண்டுபிடிப்புகள், நாக.கணேசன், ஆவணம்-இதழ்-13, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர், பக்.55
7. ஏம்பலம் செக்குக் கல்வெட்டு, ஆவணம்-இதழ்-11, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர், பக்.17.

8. திருவண்ணாமலை ஆடையூர் செக்குக் கல்வெட்டு, லெ. சுபாஸ்சந்திரபோஸ், பழங்காசு, காலாண்டிதழ் 6, பக்.18

9. Administration and Social Life Under the Pallavas, Dr. Meenakshi.

10. யாவரும் கேளிர், இரா.நாகசாமி, வாசகர் வட்டம், சென்னை-17,பக்.193-194

11. தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி-1, க.எண்.151, கூரம் செப்பேடு-6-பி

12. கல்வெட்டு இதழ், தொல்லியல் துறை வெளியீடு எண்.189,1975

13. ஐந்நூற்றுவர் செக்குக் கல்வெட்டு, நாக.கணேசன், ஆவணம்-இதழ்-11, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர், பக்.25.

14. கல்வெட்டில் வாழ்வியல், அ.கிருஷ்ணன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை-1

15. தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி-1, க.எண். 55

16. தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி-6, க.எண். 295

17. மதுரை மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி-1, பக்.101, தொல்லியல் துறை வெளியீடு

18. தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி-8, க.எண். 705

19. தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி-23, க.எண். 98

20. நம்பியாண்டார் நம்பி அருளிய திருத்தொண்டர் திருவந்தாதி, பாடல்-54

21. தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி-7, க.எண். 865

22. குடும்பம் தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்-பி. ஏங்கெல்ஸ், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ

23. நெசவுத்தொழிலும் காஞ்சியும், அ. அப்துல் மஜீத், செங்கை மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு, வரலாற்றுப் பேரவை சென்னை-2, பக்.-69

4

# நெற்குப்பை – தான ஓலையும், செப்பேடும்

சொ. சந்திரவாணன்
உதவி இயக்குநர்(பொ), மதுரை

ஒரு கோயிலுக்கோ அன்றி குறிப்பிட்ட தனி நபருக்கோ கொடுக்கப்படும் தானச் செய்தியினை மன்னன் வாய்மொழி ஆணையாக ஓலையில் எழுதுவர். அவ்வோலையின் இறுதியில் 'இதனைக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்க' எனக் குறிப்பிடுவதால் : செப்பேட்டிலும் கல்வெட்டிலும் பதிவது மரபு. ஒவ்வொரு கல்வெட்டிற்கும் அதே வாசகம் அடங்கிய ஒரு செப்பேடு இருக்க வேண்டும். ஒவ்வொரு செப்பேட்டிற்கும் ஒரு மூல ஓலை இருக்கவேண்டும். காலச்சுழலில் இவை மாறலாம். ஆனால் அண்மையில் கண்டறியப்பட்ட பனை ஓலையும், செப்பேடும் ஒரே தானச் செய்தியினை சொல்லி நின்றது. அது பற்றி விபரம் கீழ்க்கண்டவாறு.

பொன்னமராவதி வட்டம் நெற்குப்பை என்னும் சிற்றூரிலிருக்கும் திரு. சுப்பையா என்பவரின் குடும்பத்தாருக்கு உரிமையான செப்பேடு ஒன்றும் ஓலைச்சுவடியின் ஓலை இரண்டும் வாசித்ததற்காகப் பெறப்பட்டது. அவற்றின் செய்திகள் வருமாறு.

## ஓலை - விபரம்

நடு நரம்பு நீக்கப்படாத ஓலையாக உள்ள இப்பனை ஓலைகள் இரண்டும் 40 செ.மீ. நீளமும் 3 செ.மீ அகலமும் கொண்டது. ஓலைகளின் இடதுபுறம் 'ஓலைக்கண்' இடப்பட்டுள்ள இவ்விரு ஓலைகளும் நடுவில் இரண்டிரண்டு துண்டுகளாக முறிந்து காணப்படுகின்றது. முறிந்த பகுதிகளில் சில துண்டுகள் காணப்படவில்லை. வலது ஓரப் பகுதியிலும் சிறிய பகுதி சிதைந்து காணப்படு கின்றது. அப்பகுதியில் ஓரிரு எழுத்துக்கள் இருந்தன என்பதை வரிகள் வாசிப்பின் போதும், செப்பேட்டு வரிகள் வாசிப்பின்போதும் அறிந்து கொள்ள முடிகின்றது. இதே போன்று நீள அகலமுள்ள இரண்டாவது ஓலையும் நடுவே முறிந்து காணப்படுவதோடு அல்லாமல் பின்புற ஏட்டில் பாதிக்குமேல் நொறுங்கியும் முற்றிலும் சிதைந்த நிலையிலும் காணப்படுகின்றது.

இவ்விரு ஓலைகளிலுமே முதற்பக்கத்தில் 6 வரிகளும் இரண்டாம் பக்கத்தில் 5 வரிகளுமாக மொத்தம் 11 வரிகள் எழுதப்பட்டுள்ளன.

## செப்பேட்டின் விபரம்

25 செ.மீ. நீளமும் 20 செ.மீ. அகலமும் கொண்ட இச்செப்பேட்டின் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதப்பட்டுள்ளது. மொத்தம் 28 வரிகள் காணப்படுகின்றன.

செப்பேட்டின் 15வது வரி தொடங்கி 28 வது வரி வரையிலும் உள்ள செய்திகளே தொடக்கச் செய்திகளாகும். முதல் வரியிலிருந்து 14ஆம் வரி வரையுள்ள செய்திகள் நிறைவுச் செய்திகளைத் தருவதாகவும் உள்ளன.

பொதுவாகச் செப்பேட்டின் தொடக்கமாக உள்ள செய்திகள் இச்செப்பேட்டில் பாதியிலிருந்து தொடங்குகின்றது. நிறைவுப் பகுதியாக வருகின்ற செய்திகள் இங்கு தொடக்கமாக வருவதைக் காணலாம். இது செப்பேட்டினை எழுதியவர் செய்த பிழையாகக் கொள்ளலாம். அல்லது ஓலையைப் பார்த்து எழுதும் செப்பேடு எழுதுவோர் ஓலையின் தொடக்கம் எது என்பதை அறியாது எழுதியிருக்க வேண்டும்.ஆதலால் செப்பேட்டின் செய்திகள் நடுப்பகுதியில் தொடக்க வரிகளாகக் கொண்ட வரக் காணலாம்.

## ஓலை மற்றும் செப்பேட்டின் செய்தி

ஓலையில் உள்ள வாசகங்களும் செப்பேட்டில் உள்ள வாசகங்களும் இரண்டும் ஒன்றேயாகும். அது, பிறான் மலை நாட்டுப் பொன்னமராவதியைச் சேர்ந்த 'நெற்குப்பை' என்ற ஊரிலுள்ள களப்பாளர் வமிசத்துப் "பொசலானம்பலம்" என்பவருக்கு வழிவழியாக ஆண்டு அனுபவித்துக் கொள்ளக் கூடியதாக வழங்கப்பட்ட நிலதானத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.

## காலம்

ஓலை மற்றும் செப்பேட்டில் நேரடியாக மன்னர் பெயர் குறிப்பிடப்படவில்லை. ஓலையில் 'கலியுக சகார்த்தம்' என்றும் செப்பேட்டில் 'சாலி வாஹன சகாப்தம்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இரண்டிலும் ஆண்டு பற்றிக் குறிப்பிடும்போது ஆயிரத்திற்கு மேல் செல்லா நின்ற ஆண்டு எனத் தமிழ் எண்ணில் பொதுவாகக் குறிப்பிடப்படுகின்றது. எனவே காலம் எது என்பதை அரிதியிட முடியவில்லை.

மேலும் பாண்டிய மன்னர்கள் சிலர் பெயரளவில் குறிப்பிடப்பட்டுள்ளனர். அப்பெயர்களும் மரபு வழியில் குறிப்பிடப்படாமல் முன்பின்னாக பொதுவில் குறிப்பிடப்பட்டுள்ளனர். எனவே இவை பாண்டியர் காலத்தியது என கொள்ளவும் முடியவில்லை.

ஓலையில் நான்காம் வரியிலும், செப்பேட்டில் 24-வது வரியிலும் வருகின்ற 'கண்ட நாடு கொண்டு கொண்டநாடுகுடாதான்' என்ற மெய்க்கீர்த்தி வரிகள் விஜயநகர மன்னர்களும் அவர்களுக்குப் பின் வந்த ராமநாதபுரம் சேதுபதிகளும் கையாண்டவையாகும்.

விஜயநகர மன்னர்கள் மெய்க்கீர்த்திகளை முழுமையாகப் பயன்படுத்தித் தம் பெயரினைக் குறிப்பிடுவது வழக்கம். அப்பெயரின் பின்னர் தானச் செய்திகளைக் குறிப்பிடுவர். இங்கு மன்னர்கள் பெயர் எதுவும் குறிப்பிடப் படவில்லை.

எனவே இது சேதுபதிகளின் கால கட்டத்தினதாக இருக்கலாம். அதாவது கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டுடையதாகக் கொள்ளலாம். மேலும் இவ்விரு எழுத்தமைதியும் பார்க்கும்போது இக்கால கட்டத்தை உறுதி செய்கின்றன.

## ஓலையின் மொழிநிலை

புள்ளியில்லாமலும் கூட்டெழுத்தாகவும், தேவைப்படுகின்ற இடங்களில் சுருக்கெழுத்தாகவும் எழுதப்பட்டுள்ளன. தமிழ் ஆண்டுகள், மாதங்கள், தேதிகள் ஆகியன தமிழ் எண்களாகவே எழுதப்பட்டுள்ளன. பேச்சுவழக்கில் எழுதப்பட்டுள்ள இவ்வரிகள் குறில், நெடில் பாகுபாடு இன்றியும் வல்லின. மெல்லின, இடையினப் பாகுபாடின்றியும் எழுதப்பட்டுள்ளன.

## செப்பேட்டின் மொழிநிலை

ஓலையில் உள்ள வாசகத்தை அப்படியே எடுத்து எழுதப்பட்டுள்ளது. மெய்யெழுத்துகள் புள்ளியிட்டு எழுதப்பட்டுள்ளன. ஒரு சில இடங்களில் ஓலையினின்றும் செப்பேட்டின் எழுத்து வேறுபட்டு வருகின்றது. எ.கா. "கலியுக சகாற்தம்" என ஓலையில் எழுதப்பட்டுள்ளதை செப்பேட்டில் 'சாலி வாஹன சகாப்தம்' என எழுதியுள்ளனர். தமிழ் ஆண்டினைக் குறிப்பிட 'பிற சோபதி ஞ' என்பதை பிரசோபத்தி ஞ எனவும் எழுதியுள்ளதைக் காணலாம். மேலும் ஸ்ரீமுக ஞ தையி மீ யிசஉ என சுவடியில் எழுதப்பட்டுள்ள தமிழ் அண்டு மாதம் தேதியினைச் செப்பேட்டில் எழுதும்போது ஸ்ரீமுகஞ தைமீ யிசஉ எனக் குறிப்பிட்டுள்ளது ஒப்பு நோக்கத்தக்கது.

## ஊர், இடப்பெயர்கள்

ஓலையிலும் செப்பேட்டிலும் வருகின்ற தானச் செய்தியில் வருகின்ற ஊர்ப் பெயர்கள் , இடப்பெயர்கள், நீர்நிலைப் பெயர்கள் இன்றளவும் அதே பெயரிலேயே வழங்கப்பட்டு வருகின்றது. காட்டாக 'பொன்னமராவதி' 'நெற்குப்பை' "கொட்டாநத்தம்" என்ற ஊர்ப் பெயர்கள் இன்றும் அவ்வாறே அழைக்கப்பட்டு வருகின்றன.

மேலும் செக்கடி மேடு, கண்ணனிக்கண்மாய் மண்பிறலி (கரையின் பெயர்) செகுட்டுமடை காராளன் கொட்டிக் கண்மாய், குளுந்த மடை, கலிங்குதுரை சூலக்கல், கருகிண்ணிச் செய்(வயல்) என்பன. இன்றும் அதே பெயரிலேயே அழைக்கப்படுகின்றன. 'பரியா மறுந்தர் கெங்கை' என வரும் பெயர் ஊர் உண்ணும் குடிநீர் ஊருணிக்கும் பெயராய் விளங்கி வருகின்றது. 'பரியாமருந்தர்' என்பது இங்குள்ள சிவன் கோயிலின் பெயராகும். 'பொறாமலை நாடு' எனவரும் நாட்டுப் பெயர் 'பிராம்மலை' எனவும் 'பிரான் மலை' எனவும் வருகின்ற பெயராகும்.

## ஆள் பெயர்

தானம் பெற்றவர் பெயர் 'பொசலானம்பலம்' என்று வருகின்றது முக்குலத்தோரில் இடம்பெறும் அம்பலத்தார்களின் பெயர்களில் 'பொசலான்' என்பதும் ஒன்று. இம்மரபினரிடமே இவ்வோலையும் செப்பேடும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பட்டையம் எழுதியவர் பெயர் 'வடமலையப் பிள்ளை' எனக் குறிப்பிடப்படுகின்றார். செப்பேட்டில் 'வட்டமலையாப் பிள்ளை' என வருகின்றது. மேலும் இவர் 'வாசற் பிரதானி' என அழைக்கப்பட்டதாகவும் தெரிகிறது. இது அரசிடமிருந்த அலுவலர் பெயராக இருக்கலாம்.

## மன்னர்கள் பெயர்கள்

தானச் செய்தியில் குறிப்பிடப்படும் ஆள் பெயரைப் போலவே பாண்டிய மன்னர்கள் பெயர்கள் சிலவும் குறிப்பிடப்பட்டுள்ளன. அப்பெயர்கள் வருமாறு குணபாண்டியன், குலசேகர பாண்டியன், சுந்தரபாண்டியன், மலைத்தாட்கேயவன் விக்கரம பாண்டியன், சவுந்திர பாண்டியன், சந்திரபாண்டியன், குன்னி பாண்டியன் என்பன.

## ஓம்படைக் கிளவி

தானச் செய்திகளின் இறுதியில் வருகின்ற தானம் காத்தவர் பெறும் பலன், அழித்தவர் பெறும் பாவம் பற்றிக் கூறும் செய்தி ஓம்படைக் கிளவி எனப்படும். இது இச்செப்பேட்டிலும் ஓலையிலும் இறுதியில் வருகின்ற போது: கல்லுங்காவேரி புல்லும் பூமி சந்திரர் சூரியர் உள்ள அறுதிக்கும் ஆண்டு அனுபவித்துக் கொள்வாராகவும் எனக் குறிப்பிடப்படுகின்றது.

பொதுவாகச் செப்பேட்டிலும் கல்வெட்டிலும் 'சந்திராதித்தவரை' எனவும் 'ஆ சந்திராதித்தவரை' எனவும் 'ஆ சந்திராக்கவர்' எனவும் வரும். ஆனால் இங்கு மாறுபட்டு, சந்திரர் சூரியர் உள்ள அறுதிவரை எனவரக் காணலாம்.

## தானச் செய்தி எழுதியோன்

ஓலையிலும் செப்பேட்டிலும் தானச் செய்தியினை: வடமலையப்ப பிள்ளை என்பவர் எழுதிக் கையொப்பமிட்டுள்ளதாகத் தெரிகிறது. செப்பேட்டில் இவரின் பெயர் வட்டமலையாப் பிள்ளை என்று வருகின்றது. ஓலைச் சுவடியில் 'வடமலைப்ப பிள்ளை' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இவரின் பெயருடன் 'வாசல் பிரதானி' என்ற அடைமொழியுடன் கையொப்பமிட்டுள்ளதால் இவர் அரசின் உயர் பதவி அலுவலர் பணியினைப் பார்த்தவராக இருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

இவர் கையொப்பத்தின் பின்னர் 'ஸ்ரீராம செயம்' என்றும் 'அசல் பட்டையம்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

ஓலை : 1 பக்கம் : 1

1. கலியுக சகாற்த்தம் ஹூற்மேல் செல்வா நிண்ட பவஹூ சித்திரை( மீ யிசஉ) குணபாண்டியன் குலசேகற பாண்டி வற்க னாளையிலே யிதுக்கு மேல் செல்லா நின்(ற)
2. பிறசோபதி ஹூ தையி மீ யிகஉ சுந்தரபாண்டியன் முன் முலை(த்தாட்) கேய வகற்ன நாளை யிலே யிதுக்கு மேல் செல்லா நின்ற சித்திர புத்தி ஹூ வய்யகாசி மீ யி(ருஉ)
3. விக்கறம பாண்டியன் சவுந்திர பாண்டியன் யிவர்கள் நாளையி(லே யிதுக்கு) மேல் செல்லாநின்ற நளஹூ பங்குனி மீ யிசூஉ ஆய சந்திர பாண்டியன வற்குன்(னிப)
4. ாண்டியன் யிவர்கள் நாளையிலே மேல் சோபகுருது (ஹூஆ)னி மீ உயி உகண்ட நாடு கொண்டு கொண்டு குடுகாற் பாசேச்சி தப்பு வராய
5. கண்ட பாண்டி மண்டலத்தறசற் அசுபதி நளபதிதெசகணபதி (பிரதி) ராட்சிய பறிபாலன ஆண்டு கொண்டு யிதுக்கு செல்லா நின்ற நாளையில் ஸ்ரீமுக ஹூ தை(யிமீ)
6. யிசு உபொறாமலை நாட்டு பொன்னவறாபதிநெற்குப்பை யி(லிருக்கும்) களப்பாள பொசலாநம்பலம் உள்ளிட்டாற்கும் கொட்டி நத்தம் கூறுக்(கு)
7. கீள் பாற்க் கெல்லை யாவது செக்கடி மோட்டுக் பரிய(ா மறுந்தர்) கெங்கை மேல் கறை மண லாபறளிக்கும் தென் பாற்க் கெல்லையாவது கன்னினி(க்க)
8. ம்மாய் மேக்கறை மண் பெறளி சூலக் கல்லுக்கும் செகுட்டு (மடைக்கும்) மேல் பாற்கெல்லை யாவது கருகின்னி செய்க்கும் காறாளன் கொட்டி கம்மாய் குளுந்(தம)
9. டைக்கும் வடபாற் கெல்லையாவது கொட்டி கம்மாய்மண் (பிற)ளிக்கும் கலிங்கு துரை சூலக் கல்லுக்கும் யிந்த னான்ங்கெல் லைக்கும் உள்பட்டது களப்பாள (பொ)
10. சலானம்பலம் உள்ளிட்டாரும் கல்லுகாவேரி புல்லு பூமி (சந்தி)ரர் சூரியர் உள்ள அரிதிக்கும் ஆண்டு அனுபவித்துக் கொண்டு வருவாராகவும் யிந்தப் படிக்கி(யிந்த)
11. பட்டையம் யெழுதினே(ன்) வாசபிறதானிவடமலை யப்பபிள்(ளை) கயெழுத்து ஶ்ரீமசெயம் அசல்பட்டயம் உ

## செப்பேடு

1. மலை நாட்டு பொன்னவராவதி நெற்குப் பையிலிருக்கும்
2. களப்பாள பொசலானம்பலம்
3. உள்ளிட்டாருக்கு கொட்டாநத்தம் கூறுக்கு கீழ் பார்க்கெல்லை
4. யாவது செக்கடி மேட்டுக்கும் பரியாமறுந்தர் கெங்கை
5. மேல்கரை மண்பிரலிக்கும் தென்பார்க் கெல்லையாவது
6. கண்ணனிக் கண்மாய் மண் பிரலி சூலக்கல்லுக்கு செகுட்டு மடை
7. க்கும் மேல் பார்க் கெல்லையாவது கருகின்னி செய்க்கும் காராளன்
8. கொட்டி கண்மாய் குளுந்த மடைக்கும் வடபார்க்கெல்லையாவது
9. கொட்டி கண்மாய் மண்பிரலிக்கும் கலிங்குதுரை சூலக்கல்லுக்கும்
10. யிந்த நாங்கெல்லைக் குள்பட்டது களப்பாள பொசலானம்ப
11. லம் உள்ளிட்டார் கல்லு காவேறி புல்லு பூமி சந்திரர் சூரியர்
12. உள்ள அறுதிக்கும் ஆண்டு அனுபவித்துக் கொண்டு வருவாராகவும்
13. யிந்தப்படிக்கு யிந்தப் பட்டயம் யெழுதினே(ன்) வாசபிரதானி
14. வட்டமலையாபிள்ளை கையெழுத்து றாமசெயம் அசல் பட்டயம் உ
15. சாலிவாஹன சகார்த்தம் ௲க்கு மேல் செல்லாநின்ற பவ ௵ சித்திரை
16. ௴ ௰௨ குணபாண்டியன் குல சேகற பாண்டி வற்கனாளையிலே
17. யிதுக்கு மேல் செல்லா நிண்ட பிரசோபத்தி ௵ தை ௴ ௰௨
18. சுந்தரபாண்டியன் முன்முலைத் தாடகேயவற் ன நாளையி
19. லே யிதுக்கு மேல் செல்லா நின்ற சித்திர புத்தி ௵ வய்யகாசி
20. ௴ ௰௨ விக்கிரம பாண்டியன் சுவந்தர பாண்டியன் யிவற்கள்
21. நாளையிலே யிதுக்கு மேல் செல்லாநின்ற நள ௵ பங்குனி ௴ ௰௬
22. உ ஆய சந்திரபாண்டியனவற்குன்னிபாண்டியன் யிவகள்
23. நாளையிலே றவ ௵மேல் சோபகிருது ௵ ஆனி ௴ உ௰௨
24. கண்டநாடு கொண்டு குடுகார் பிசேக்கிதயுமவாற் வராயன்
25. கண்ட பாண்டி மண்டலத்த றசற் அசுபதி நளபதி தேசகனாபதி
26. பிரதிராட்சிய பரிபாலன ஆண்டு கொண்டு யிதுக்குமேல்
27. செல்லாநின்ற நாளையில் ஸ்ரீமுக ௵ தை ௴ ௰௨
28. பொற

**5**

# ஓமந்தூர் பீமேசுவரர் கோயில் (ம) வைகுந்தப் பெருமாள் கோயில் – ஓர் ஆய்வு

**இரா.சிவானந்தம்**
கல்வெட்டாய்வாளர்

விழுப்புரம் மாவட்டம் கிளியனூர் வட்டம் திண்டிவனம் - புதுச்சேரி நெடுஞ்சாலையில் திண்டிவனத்திலிருந்து 9 கி.மீ. தொலைவில் ஓமந்தூர் என்னும் ஊர் அமைந்துள்ளது. தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் திரு ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள் பிறந்தது இவ்வூராகும்.

இவ்வூர் பண்டைய காலத்தில் ஒய்மா நாட்டின் ஒரு பகுதியாக இருந்தது. ஒய்மா நாட்டை நல்லியக்கோடன் என்ற மன்னன் கிடங்கிலைத் (தற்போதைய திண்டிவனம்) தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தான் என்று சங்க இலக்கிய நூல்களில் ஒன்றான சிறுபாணாற்றுப்படை பகர்கிறது.

## ஊர் பெயர்

இவ்வூரில் "பீமேசுவரர்" கோயில், "வைகுந்தப் பெருமாள் கோயில்" ஆகிய இரு கோயில்கள் அமைந்துள்ளன. "ஓமந்தூர்" பீமேசுவரர் கோயிலிலுள்ள முதலாம் இராசநாராயணச் சம்புவராயர் கல்வெட்டுகள் இவ்வூரினை "ஒகந்தூர்" என்று குறிப்பிடுகின்றன. கி.பி. 1538-ஆம் ஆண்டு விஜயநகரர் காலக் கல்வெட்டும் ஒகந்தூர் என்றே குறிப்பிட்டுகிறது. எனவே ஒகந்தூர் என்றழைக்கப்பட்ட இவ்வூர் தற்போது "ஓமந்தூர்" எனத் திரிந்துள்ளது.

## பீமேசுவரர் கோயில்

இக்கோயில் கருவறை, இடைக்கட்டு, அர்த்தமண்டபம், மகாமண்டபம், முன் மண்டபம் என்ற அமைப்புடன் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. சதுரமான கருவறையின் நடுவே சுமார் 6 அடி உயரமுள்ள சிவலிங்கம் காட்சியளிக்கிறது. அர்த்தமண்ட தெற்கு தேவகோட்டத்தில் தாமரை பீடத்தின் மீது நடனம் புரியும் விநாயகர் உருவமும், கருவறை தெற்கு தேவகோட்டத்தில் ஆலமரத்தின் கீழ் அறம் உரைக்கும் அண்ணல் தென்முகக் கடவுளான தெட்சணமூர்த்தி உருவமும், கிழக்கே சங்கு சக்கரம் ஏந்தி திருமால் உருவமும், வடக்கே நான்முகனான பிரம்மா உருவமும், அர்த்தமண்டப வடக்கு தேவகோட்டத்தில் எருமை மீது திரிபங்க நிலையில் வடவாயிற் செல்வியான "துர்கை" உருவமும் காணப்படுகின்றன.

மகாமண்டபத்தில் இராஜராஜேசுவரி அம்மன், பைரவர், சூரியன் போன்ற சிற்பங்கள் உள்ளன. இம்மண்டபத் தூண்களில், இறைவுருவங்கள், விலங்குகள், நடன மங்கையர், துவாரபாலகர் உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகப் பொறிக்கப்பட்டுள்ளன. திருச்சுற்றில் விநாயகர், வள்ளி தெய்வானையுடன் ஆறுமுகர், அம்பாள் ஷிராம்பிகா ஆகியோருக்குத் தனிச் சன்னதிகள் உள்ளன. மேலும் நவக்கிரகம், சண்டிகேசுவரர் சன்னதி, நந்தி, தீர்த்தக் கிணறு, மடப்பள்ளி ஆகியனவும் அமைந்துள்ளன.

## இறைவன் பெயர்

முதலாம் இராசராசனது கல்வெட்டில் (கி.பி. 996) இக்கோயில் இறைவன் திருவருளிஸ்வரத்தாழ்வார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. முதலாம் இராசநாராயண சம்புவராயர் கல்வெட்டுகள் "திருவிமீசுவர உடையனாயினார்"., இறங்கல்மீட்ட நாயனார், என்று இக்கோயில் இறைவனை குறிப்பிடுகின்றது.

## கல்வெட்டுகள்

இராசராச சோழனின் பதினொறாவது ஆட்சியாண்டு (கி.பி. 996) கல்வெட்டு நந்தா விளக்கு எரிப்பதற்காக தொண்ணூறு ஆடு தானமாக வழங்கியச் செய்தியைக் கூறுகிறது. முதலாம் இராசநாராயண சம்புராயர் காலத்தில் (1336-1368) கோயில் வழிபாட்டிற்கும் திருப்பணிக்கும் செலவு செய்ய கடமை வினியோகம். சூலவரி, நூலாயம் ஆகிய வரிகளை வழங்கி தாழ்வற நடத்தி வரச் சொன்னதைக் கருவறை முப்பட்டைக் குமுதத்தில் உள்ள கல்வெட்டுச் சாசனம் தெரிவிக்கிறது. மற்றொரு கல்வெட்டு கரைக்காட்டுப்பற்று என்ற ஊரையும் சிறுநாவலூரில் வசூலிக்கப்பட்ட வரிகளையும் கோயில் திருப்பணி செய்யவும் பூசை தடையின்றி நடக்கவும் சர்வமானியமாக வழங்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது. இக்கோயில் முதலாம் இராசராசன் காலத்தில் கட்டப்பட்டது. சிலகாலங்களுக்குப் பிறகு சிதிலமடைந்ததால் முதலாம் இராசநாராயண சம்புவராயர் காலத்தில் (1336-1368) மீண்டும் முழுவதுமாகச் சீர்படுத்தப்பட்டு திருப்பணி நடைபெற்றுள்ளது. எனவே தற்போதைய இக்கோயிலின் காலம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு எனலாம்.

## வைகுந்தபெருமாள் திருக்கோயில்

ஓமந்தூர் பீமேசுவரர் கோயில் அருகாமையில் வைகுந்தபெருமாள் கோயில் உள்ளது. பீமேசுவரர் கோயில் கி.பி. 1538-ஆம் ஆண்டு விசயநகரர்காலக் கல்வெட்டு இப்பெருமாளை "வீற்றிருந்த பெருமாள்" என்று குறிப்பிடுகிறது. இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், முன்மண்டபம் என்ற அங்கங்களைப் பெற்றுள்ளது. கருவறையில் உள்ள செவ்வக வடிவ மேடையில் ஸ்ரீதேவி பூதேவியுடன் பெருமாள் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். இக்கோயில் விமானம் அதிட்டானம் முதல் சிகரம் வரை செங்கற் கட்டுமானத்தால் கட்டப்பட்டுள்ளது. சிவன்கோயிலில் உள்ள கல்வெட்டு ஆதாரத்தைக் கொண்டு இக்கோயில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனலாம். இக்கல்வெட்டில் தற்போதைய வைகுந்தப்பெருமாள் கோயில் இறைவன் வீற்றிருந்த பெருமாள் என்றழைக்கப்பட்டுள்ளது.

# 6

# ஆரணி ஜாகீரின் வரலாறு

**து. துளசிராமன்**
காப்பாட்சியர், பூண்டி

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணிக்கு கிழக்கே ஐந்து கி.மீ. தூரத்தில் கமண்டல நாகநதியின் வடகரையில் உள்ள சத்திய விஜயநகரத்தை தலைமையிடமாகக் கொண்டு ஆரணி ஜாகிர்தார்கள் இப்பகுதியை ஆண்டு வந்தார்கள். ஆங்கிலேயர் காலத்தில் வடக்கே மலைத் தொடரும் கிழக்கே ஆர்க்காடு மற்றும் வந்தவாசி வட்டங்களும் தெற்கேயும் மேற்கேயும் போளூர் வட்டமும் எல்லைகளாகக் கொண்டு ஏறக்குறைய 211 சதுரமைல் பரப்பிற்கு ஆரணி ஜாகீர் அமைந்திருந்தது.

## வரலாறு

கி.பி. 1638இல் மராட்டா சிவாஜியின் தந்தையாகிய ஷாஜி என்பவரை கர்நாடகத்தின் மீது படையெடுக்க பீஜப்பூர் அரசர் அனுப்பினார். ஷாஜியின் மூத்தமகன் ஏகோஜி (1675 - 1684) பின்னாளில் தஞ்சை மராட்டிய அரச மரபை தோற்றுவித்தார். ஷாஜிக்கு உறுதுணையாக கர்நாடக படையெடுப்பில் வேதஜி பாஸ்கர் பந்த் என்பவர் படைத்தலைவராக பணியாற்றினார். இம்மராட்டியப் படை முதலில் மைசூரை சுற்றியுள்ள பகுதிகளை வென்று பின் தமிழகத்தின் பிறபகுதிகளையும் வென்றது. கி.பி.1664-ல் ஷாஜி இறந்த பின்னர் வேதஜி பாஸ்கர் பந்த்க்கு அவருடைய உண்மையான நீண்டகால படைப்பணியை (militory service) பாராட்டி ஆரணி ஜாகீரை நிலையான வெகுமதியாக (permanent sunnad) பீஜப்பூர் அரசர் வழங்கினார். சுமார் 287 ஆண்டுகளுக்கு அவரது வழித்தோன்றல்கள் இப்பகுதியை ஆண்டனர். கி.பி.1750-ஆம் ஆண்டில் ஆர்க்காடு நவாப் அன்வருதின் கானுக்கும் சந்தாசாகிப்புக்கும் இடையில் நடைபெற்ற வாரிசுரிமைப் போரில் ஆரணியின் ஐந்தாவது ஜாகீர்தாராக விளங்கிய திருமலைராவ் என்பவர் வெகுசாமர்த்தியாக இருவரிடமும் நற்பெயருடன் தன்நிலையை உறுதியாக்கிக் கொண்டார். கி.பி. 1761-ல் ஆர்க்காட்டு நவாப் முகமதலி ஆரணி ஜாகீரை திருமலைராவிடமிருந்து எடுத்துக் கொண்டார். கி.பி. 1762-ல் நவாப் முகமதலிக்கும் தஞ்சை அரசர் பிரதாப்சிங்கிற்குமிடையே ஏற்பட்ட உடன்படிக்கையின்படி திருமலைராவுக்கு மீண்டும் ஆரணி ஜாகீரின் உரிமை வழங்கப்பட்டது. கி.பி. 1781ல் ஆரணி ஹைதர்அலியால் கைப்பற்றப்பட்டு 1783 வரை அவரின் ஆளுகையின்

கீழ் இருந்தது. பின்னர் 1789-ஆம் ஆண்டு அன்றைய ஆங்கிலேய கவர்னர் ஹோபார்ட் என்பவரால் மீண்டும் ஆரணி ஜாகீரின் உரிமை திருமலைராவின் பேரன் சீனிவாசராவ் தமக்கு வாரிசுகள் இல்லாத நிலையில் 1795-ல் இறந்து விடுகிறார். அவரின் மனைவி திருமால்ராவ் என்பவரை தத்து எடுத்துக் கொண்டு அவருக்கு ஜாகீரின் உரிமையை வழங்கினார். இந்த திருமால்ராவுக்குப் பின்னர் அவரது மூத்த மகன் சீனிவாசராவ் II என்பவர் 1825-ல் ஆரணி ஜாகீர்தாராக பட்டமேற்றார்.

ஆரணி ஜாகீர்தார்கள் ஆரணிக்கு அருகிலுள்ள சத்தியவிஜயநகரத்தை தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். ஜாகீர்தாருக்கு நிர்வாகத்தில் உதவி புரிய ஒரு மேலாளரும் பல அலுவலர்களும் பணியாற்றினார்கள். கருவூலமும் நீதிமன்றமும் இங்கேயே இருந்தன. நிலவரியே முக்கிய வருவாயாக கருதப்பட்டது. வருவாயில் 10000 ரூபாய் திறையாக ஆர்க்காடு நவாபுக்கும் ஆங்கில அரசுக்கும் செலுத்தப்பட்டது.

## சத்திய விஜயநகரம் அரண்மனை

சுமார் 36 ஏக்கர் நிலப்பரப்பில் இவ்வழகிய அரண்மனை கட்டப்பட்டுள்ளது. நீளமான மதில் சுவருடைய இவ்வரண்மனையின் முக்கிய வாசல் வடக்கு நோக்கி உள்ளது. இவ்வாயிலை ஒட்டி கட்டப்பட்டுள்ள மிகப் பெரிய இரண்டடுக்கு மாடி கட்டிடம் தான் ஜாகீரின் நிர்வாக அலுவலகமாகத் திகழ்ந்தது. இதனையடுத்துள்ள விசாலமான அழகிய தர்பார் ஹாலும் நீதிமன்ற கட்டடமும் முக்கியமாகவையாகும். இக்கட்டடங்களுக்கு சற்று தள்ளியுள்ள அழகிய மாடி வீடுகளில் தான் ஜாகீர்தார் தம் குடும்பத்துடன் உற்றார் உறவினருடனும் வசித்து வந்தார். இந்த அரண்மனை1850-ஆம் ஆண்டு வாக்கில் சீனிவாசராவ் என்பவரால் கட்டப்பட்டது. "ஸ்ரீவிலாஸ்" என்னும் கவின்மிகு கட்டடம் 1872-ல் கட்டப்பட்டுள்ளது. இதன் சுவர் முழுவதும் அழகிய வண்ணக்கோடுகளாலான ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன.

## பூசிமலைக் குப்பம் மாளிகை

ஆரணியிலிருந்து சுமார் 18 கி.மீ. தூரத்திலுள்ள பூசிமலைக்குப்பத்திற்கு அடுத்து சுற்றிலும் மலைகள் சூழ்ந்து நிற்கின்ற அழகிய சூழ்நிலையில் அடர்த்தியான மா, பலா, தென்னை போன்ற மரங்களுக்கிடையில் இந்த அழகிய மாளிகை அமைந்துள்ளது. இம்மாளிகை கி.பி.1872-ல் சீனிவாசராவ் என்பவரால் கட்டப்பட்டது. இது இவரின் கோடைக்கால தங்குமிடமாக இருந்துள்ளது. இவர் கோடைக்காலத்தில் தம் குடும்பத்தினர் மற்றும் ஜாகீர் அலுவலர்களுடன் இம்மாளிகையில் தங்கியிருந்தார்.

சத்திய விஜயநகரம் மற்றும் பூசி மலைக்குப்பம் அரண்மனைகளை ஊரக வளர்ச்சித் துறைக்காக 1956-ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு தன்வசம் எடுத்துக்கொண்டது.

# 7

# திருக்கோயில் மணிகள்

**கி. ஸ்ரீதரன்**

தொல்லியல் துணை கண்காணிப்பாளர்(ஓய்வு)

திருக்கோயில்களில் வழிபாட்டின்போது பயன்படுத்தப்படும் மங்கல ஒலி எழுப்பும் இசைக் கருவிகளில் ஒன்றாக மணி பயன்படுத்தப்பட்டு வருவதைக் காண்கிறோம். கையில் பிடித்துக் கொண்டு அடிக்கப்படும் மணி, "கைமணி" என அழைக்கப்படுகிறது. இதைத்தவிர கொத்துமணி, கண்டாமணி என்று பல வகைகள் ஆலய வழிபாட்டில் உள்ளன. "கண்டாமணி" என்பது ஆலயத்தில் வழிபாடு நடப்பதையும், நேரத்தை அறிவிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. கை மணியின் பிடியின் உச்சிப்பகுதியில், சிவன் கோயிலாக இருந்தால் நந்தி: பெருமாள் கோயில் என்றால் கருடன் அல்லது அநுமன்: காளி-பிடாரி கோயில் என்றால் திரிசூலம் காட்டப் பெற்றிருக்கும். பண்டை நாளில் கோயில்களில் வழிபாடு நடக்கும் பொழுது கைமணி, எறிமணி, தூப மணி போன்றவற்றை செய்து அளிக்கப்பெற்றதை பல கோயில் கல்வெட்டுச் சான்றுகளின் மூலம் அறிகிறோம்.

பல கோயில்களில் காணப்படும் மணிகள் அக்கோயிலின் சிறப்பையும், வரலாற்றுப் பெருமையையும் எடுத்துக் கூறுவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. இராமேசுவரம் திருக்கோயிலுடன் நேபாள மன்னர்கள் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள். இக்கோயிலில் அழகிய வேலைப்பாட்டுடன் காட்சி தரும் மணி நேபாள மன்னரால் 18-ஆம் நூற்றாண்டில் வழங்கப்பட்டதாகும். திருநெல்வேலி மாவட்டம் நான்குநேரி வட்டத்தில் உள்ள திருக்குறுங்குடிக்கோயில் சிறப்பான வைணவத் திருத்தலமாக விளங்குகிறது. இக்கோயிலில் பெருமாள் சன்னதிக்கு முன்பாக பெரிய மணி ஒன்று தொங்கவிடப்பட்டுள்ளது. திருவாங்கூர் மன்னர் ஆதித்யவர்மா 1469ல் செய்தளித்த மணி கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலின் மணியில் இச்செய்தி பாட்டாகப் பொறிக்கப்பட்டுள்ளது சிறப்பானது. அப்பாட்டு இதோ:

"செயதுங்க நாட்டுச் சிறவாய் மன்னாதித்தன் தென்வஞ்சியான்
வியலொன்றகில கலையாளன் கன்னிவிசாகம் வந்தோன்
நயம் ஒன்று கொல்லம் அறுநூற்று நாற்பத்துநாலினணப்பால்
அயனும் பணியுநம்பிக்கு மணி அளித்தான் அன்புகொண்டே"

500 ஆண்டுகளுக்கும் மேலாக இம்மணி திருக்குறுங்குடி நம்பியின் புகழை ஒலித்துக்கொண்டே இருப்பது நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

திருச்சிராப்பள்ளி தாயுமான சுவாமி கோயிலில் வழிபாட்டில் இருக்கும் மணியில்,"திருச்சினாப்பள்ளி ஸ்ரீதாயுமானசுவாமி மலை நாதகண்டாமணி-சிவமயம்" என்று புடைப்பு எழுத்துககளாகக் காணப்படுகிறது. மேலும் இது 1918-ஆம் ஆண்டு நாகப்பட்டிணம் இரயில்வே தொழிற்சாலையில் C.CRIGHTON என்பவரின் மேற்பார்வையில் செய்யப்பட்டது என்பதையும் அறியமுடிகிறது. திருச்சிராப்பள்ளி என்ற பெயர் இக்கால கட்டத்தில் "திருச்சினாபள்ளி" என்று ஆங்கிலேயர்களால் அழைக்கப்பட்டு வந்ததையும் அறியமுடிகிறது.

சிதம்பரம் கோயிலில் வெவ்வேறு இடங்களில் மணிகள் பயன்பாட்டில் இருந்து வருகின்றன. நடராஜர் சன்னதி நுழைவாயிலின் இடப்புறம் உள்ள பெரிய மணியில் "சிதம்பரம் ஆராய்ச்சி மணி - யாழ்ப்பாணம் முழாய் சின்னப்ப பிள்ளை உபயம் - 1884," என்று பொறிக்கப்பட்டுக் காணப்படுகிறது. மணியின் மேற்புறத்தில் அம்மணி செய்த இடமான BOCHUMER VEREIN GUSS STAHIFABRIK - ஜெர்மனியில் BOCHUM என்ற இடத்தில் வார்ப்பு செய்யப்பட்டதைக் காட்டுகிறது. யாழ்ப்பாணத்தில் "முழாய்" என்னும் பகுதியைச் சேர்ந்த சின்னப்ப பிள்ளை என்பவர் இம்மணியை சிதம்பரம் கோயிலுக்கு செய்தளித்தார் என்பதை அறிய முடிகிறது. நூறு ஆண்டுகள் மேற்பட்டும் இன்றும் வழிபாட்டு நேரத்தை அறிவிப்பதற்கு இம்மணியினைப் பயன்படுத்தி வருகின்றனர்.

நடராசர் சன்னதிக்கு அருகே ஒரு மணியில், "சிதம்பரம் சபாநாயகர் சர்மணிக-க்கு சேர் ௲ரா 1889க்கு உ சர்வதாரி தை மீ SIR WORK NEGAPATTINAM 1889" - என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இம்மணியின் எடை 1500 சேர் ஆகும். நாகப்பட்டிணத்திலிருந்த தென் இந்திய ரயில்வே பட்டறையின் செய்யப்பட்டு 1889-ஆம் ஆண்டு அளிக்கப்பட்டதை அறியமுடிகிறது. இக்கோயிலில் உள்ள மற்றொரு மணியில் "சிதம்பரம் நடராஜர் கண்டாமணி காரைக்குடி இளையத்தக் குடிக்கோயிலில் ஒருக்கூருடையான் மெய்யப்ப செட்டி மகன் செட்டியப்ப செட்டி உபயம்-1884-வார்ப்பு இராமசுப்பய்யா ஆசாரி" என்று பொறிக்கப்பட்டுள்ளது. மணியினை வடித்து வார்ப்பு செய்தவர் யார் என்ற குறிப்பினையும் இம்மணியின் மூலம் அறிந்து கொள்கிறோம்.

சிதம்பரம் கோவிந்தராஜப் பெருமாள் கோயிலின் தென்பகுதியில் உள்ள மணியின், "ராமசெயம் கலியுகாதி வருடம் 4990 சென்ற சர்வதாரி வருடம் தை மாதம் 24-ம் தேதி ஆடுர் கலிராமகுமாரன் மங்களம் பிள்ளை சிதம்பரம் கோவிந்தராஜர் சன்னதிக்கு ஆராய்ச்சி மணி தர்மம் செய்யப்பட்டது. ராம அம்பலவாண பரதேசி பண்ணப்பட்டு வைத்திய சுந்தரம் உபயம்" என்ற வாசகங்கள் காணப்படுகின்றன.

"PRESENTED BY TAN KIMCHING CONSUL FOR SIAM TO THE SHEDUMBARAM TEMPLE IVLY A.D. 1884"

"சிதம்பரம் நடேசருக்கு சிங்கப்பூரில் தியம் கவுன்சில் தன்கீம் செவ் உபயம் தாரணஹு" என்று தமிழில் புடைப்பு எழுத்துகளாகக் காணப்படுகின்றன. மேலும் இதற்கு அருகிலேயே சீன எழுத்துக்குளும் காணப்படகின்றன. மணியின் தலைப்பகுதியில் JOHN TAYLOR AND CO என்று மணியினை வார்ப்பு செய்த இடம் குறிக்கப்படுகிறது. சயாம்நாட்டைச் சேர்ந்த "தன்கீம் செவ்" என்பவர் சிதம்பரம் கோயிலின் மீது ஈடுபாடு கொண்டு இம்மணியினை வழங்கியுள்ளார் இம்மணியில் "சிதம்பரம்" என்ற பெயர் 'SHEDUMBARAM' என்று எழுதியுள்ளது குறிப்பிடதக்கது.

திருக்கோயில் மணிகள், இறைவழிபாட்டில் பங்குபெற்று விளங்கினாலும் கோயில் மீது அன்பர்கள் கொண்டிருந்த ஈடுபாட்டினையும் எடுத்துக்கூறும் வரலாற்றுச் சான்றுகளாகத் திகழ்கின்றன.

# 8

# வடபுதுப்பட்டு பழங்கால தூம்பு

**து. துளசிராமன்**
காப்பாட்சியர், பூண்டி

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், ஆம்பூர் சர்க்கரை ஆலைக்கு அருகிலுள்ள வடபுதுப்பட்டு கிராமத்தில் கண்ணன் என்பவர் சர்வே எண். 1791 2பி-இல் உள்ள தமக்குச் சொந்தமான நிலத்தை விவசாயப் பயன்பாட்டிற்காக சமன் செய்தபோது ஒழங்குப்பட்ட நீளமான கற்றூண் ஒன்று காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து அவ்விடத்தில் அகழ்ந்து பார்த்ததில் இன்னும் சில கற்பலகைகள் காணப்பட்டன. இது குறித்த விவரம் வருவாய் துறையினருக்குத் தெரியப்படுத்தப்பட்டு வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் இவ்விடத்தில் தொல்லியல் பரப்பாய்வு செய்ய நம் துறைக்கு தெரியப்படுத்தியதை அடுத்து மேற்படி இடம் ஆய்வு செய்யப்பட்டது.

## பழங்கால தூம்பு

மேற்படி இடத்திற்கு கிழக்கிலும் தெற்கிலும் நீண்ட நெடிய மலைகளும் காணாங்குப்பம் காப்பு காடுகளும் (Reserve forests) உள்ளன. மேற்குப்புற மலையடிவாரத்தில் விளைநிலங்கள் காணப்படுகின்றன. இந்நிலங்களுக்கு இடையில்தான் மேற்படி கற்றூண் காணப்படுகிறது. இதனைச் சுற்றி அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்ட இடம் தற்பொழுது மழையால் தூர்ந்து போய் இருந்தது. இவ்விடத்தை கிராம நிர்வாக அலுவலர் ஊர் பொது மக்கள் உதவியுடன் மீண்டும்அகழ்ந்து பார்க்கப்பட்டது. இதன் அமைப்பை கவனமாக ஆய்வு செய்ததில் இது பழங்கால தூம்பு (மதகு) எனத் தெரியவந்தது. பழங்காலத்தில் இம்மலையடிவாரத்தில் ஒரு ஏரி அல்லது குளம் இருந்திருக்க வேண்டும். இதிலிருந்து தண்ணீரை முறைப்படுத்தி விவசாயத்திற்கு பயன்படுத்துவதற்கு இங்கு ஒரு கருங்கல் தூம்பை நிறுவியுள்ளனர். காலப்போக்கில் இங்கிருந்த ஏரியும் தூம்பும் தூர்ந்து போய் இப்பகுதி முழுவதும் மேட்டுப் பகுதியாக மாறிவிட்டது. தற்பொழுது விவசாயப் பயன்பாட்டிற்காக இவ்விடத்தை சமன் செய்தபோது இத்தூம்பு வெளிப்பட்டது.

## தூம்பின் அமைப்பு

ஏரி மலையடிவாரத்தை ஒட்டி வடக்குப்புறத்தில் இருந்துள்ளது. இத்தூம்பு ஏரியின் தெற்கு கரையில் அமைக்கப்பட்டுள்ளது. 168 செ.மீ. நீளமும் 46 செ.மீ.

அகலமும் 36 செ.மீ. தடிமனும் கொண்ட இரண்டு கற்றூண்கள் 160 செ.மீ. இடைவெளிவிட்டு இருபுறமும் நடப்பட்டுள்ளன. இத்தூண்களின் இடையில் உள்ள பகுதி கீழிருந்து 108 செ.மீ. உயரத்திற்கு நான்கு கற்பலகைகள் கொண்டு சுவர்போல் கட்டப்பட்டுள்ளது. இதற்கு நடுவில் 15 செ.மீ. அகலத்திற்கு ஒரு செங்கல் கால்வாய் செல்கிறது. இதன் மீது 160 செ.மீ. X 120 செ.மீ. அளவுள்ள ஒர பெரிய கற்பலகை மூடப்பட்டுள்ளது. இக்கற்பலகைக்கு இருபுறமும் தூணை ஒட்டி 48 செ.மீ. அகலமுள்ள செங்கற் சுவர்கள் எழுப்பப்பட்டு ஒரு தொட்டி போன்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த கற்பலகையில் செங்கல் கால்வாய் செல்லும் இடத்தில் 20 செ.மீ. விட்டமுள்ள ஒரு வட்டமான துளை உள்ளது. இரண்டு கற்றூண்களுக்கிடையியல் கீழிலிருந்து 108 செ.மீ. உயரத்தில் ஒரு செவ்வக வடிவ கருங்கல் பொருத்தப்பட்டு அதன் நடுவிலும் 12 செ.மீ. விட்டமுள்ள ஒரு வட்ட வடிவ துளை போடப்பட்டுள்ளது. இவ்விரு துளைகள் ஊடே ஒரு மரக்கம்பை செலுத்தி அதன் அடியில் மரத்தாலான "கார்க்" போன்ற அமைப்பைப் பொருத்தி தண்ணீர் வெளியேறும் சிறுகால்வாயை (15 செ.மீ அகலமுள்ளது) அடைத்து விடுவார்கள். தேவைக்கேற்ப மரக்கம்பை மேலே இழுத்து தண்ணீரை வெளியேற்றுவார்கள்.

## காலம்

இத்தூம்பின் காலத்தை துல்லியமாக அறிவதற்கு இதன் மீது கல்வெட்டு ஏதும் காணப்படவில்லை. எனினும் கங்கை கொண்ட சோழபுரம் பொன்னேரி கரையில் மேற்கொண்ட அகழாய்வில் காணப்பட்ட தூம்பு அமைப்பை ஒப்பிட்டு இத்தூம்பு கி.பி. 12 -13ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்கலாம் என அறிய முடிகிறது.

# 9

# சிவபாதமலர் வண்டும் சிவபாதசேகரனும்

**கோ. சசிகலா**

கல்வெட்டுப் பயிற்சி மாணவி

தஞ்சைப் பெருவுடையார் கோயில் ஆயிரமாண்டு விழா நடைபெறும் இத்தருணத்தில் இத்தேவாலயச் சக்கரவர்த்தி இராஜராஜனின் நினைவலைகள் நம் நெஞ்சில் மோதுவது இயல்பே. இம்மாமன்னன் தன் முன்னோரிடமிருந்து பல அரிய சிந்தனைகளைப் பெற்று தன் ஆட்சிகாலத்தில் சமய, சமூக, அரசியல், கலை, பண்பாடுகளில் அதன் தாக்கங்களை பிரதிபலித்துள்ளான். இத்தகு முறையில் சிவபாதசேகரனாம் நம் இராஜராஜனின் சீர்மிகு முன்னோடி சிவனின் பாத மலர்களில் உறையும் வண்டென திருவாலங்காடு பட்டயம் சிறப்பிக்கும் கோப்பரகேசரி பராந்தகன் எனில் அது மிகையாகாது.

"வெங்கோல் வேந்தன் தென்னாடும் ஈழமுங் கொண்டதிறற்

செங்கோற் சோழன் கோழிவேந்தன் செம்பியன் பொன்னணிந்த

அங்கோல் வளையார் பாடியாடும் அணி தில்லையம்பலம்" - மேற்கண்ட திருவிசைப்பா பாடலினால் கண்டராதித்தன் இரண்டு செய்திகளை நமக்குத் தருகிறார். தென்னாடும் ஈழமும் கைக்கொள்ளும் வேட்கை சோழர்களுக்கு என்றும் இருப்பினும் முதலில் அவ்விலக்கினை அடைந்த பெருமை உடையவன் "மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி"வர்மனே. அவன் வெற்றியை நிலைநாட்டும் பொருட்டு செழியரை தேசுகொள் கோவிராசகேசரிவர்மன் ஈழத்தில் படையெடுத்து சன்நாதமங்கலம் உருவாக்கி தன் ஆட்சியை நிலைப்படுத்தினான்.

மற்றொன்று பராந்தகன் தில்லையில் பொன்வேய்ந்ததாகும். சைவர்களுக்கு பெரிய கோயிலாம் சிதம்பரத்தில் பரகேசரி பொன்வேய்ந்தான். தாம் எடுப்பிச்ச "தட்சிண மேருவிடங்க" என்னும் தஞ்சைப் பெரிய கோயில் விமானம் முழுவதும் பொன்னால் அமைத்தான் இராசகேசரி. மேலும் சோழப் பேரரசின் இவ்விரு சிவநேசச்செல்வர்களும் நாட்டியத்தில் அளவில்லா ஈடுபாடு கொண்டிருந்ததை முன்னோன் பொன்வேய்ந்த அணி தில்லையம்பலத்தில் வளையார் பாடியாடும் வரியாலும், அவன் தம் ஜயஸ்தம்ப விமானத்தை கொண்ட கோயிலாகிய புள்ளமங்கையில் இடம்பெற்றுள்ள ஆடல்மகளிரின் எண்ணிறந்த சிற்பங்களினாலும் அறியலாம். இளையோன் இராசராசனோ தாம் எடுப்பிச்ச திருக்கற்றளியில் நானூறு தளிச்சேரி ஆடல்மகளிரை கோயில் பணியில் ஈடுபடுத்தி

தன் முப்பாட்டனார் சிற்பங்களாக கண்டவற்றை உயிரோவியங்களாக உலவவிட்டதோடு, ஆடல்வல்லான் திருமேனி பலவற்றோடு அப்பெயருள்ள அளவையையும் உருவாக்கினான்.

தென்னாட்டு கோயில்களின் பொற்காலமென வரலாற்றறிஞர்கள் புகழும் சங்கிராமராகவன்தான் எடுப்பித்த பல கற்றளிகளில் அதிட்டானத்தில் இராமாயணம் மற்றும் சிவலீலைகளை சிறு சதுரவடிவ புடைப்புச் சிற்பங்களாகக் காட்டியுள்ளான். தட்சிணமேருவிலோ நித்தவிநோதன் தன் வெற்றிக் கோபுரம் இரண்டிலும் பல க(சு)தைச் சிற்பங்களை அமைத்துள்ளான். புராண கதை தெய்வப்புருஷர்களோடு அரசர்கள் தம் கோட்பாடு இணைக்கும் எண்ணம் இவ்விருவருக்கும் இருந்துள்ளதை இவை தெற்றென விளக்குகிறது.

பராந்தகன் தனது தந்தை ஆதித்தனுக்கு தொண்டைமானாற்றூரில் "கோதண்டராமேச்சுரம்" எனும் பள்ளிப்படையை எடுப்பித்த அரிய செய்கை சிவபாதசேகரன் தன் பாட்டனாருக்கு மேல்பாடியில் "அரிஞ்சிகையீச்சுரம்" எடுப்பிக்க தூண்டுகோலாயிற்று எனலாம். பள்ளிப்படை கொண்ட சோழப் பேரரசர்கள் இருவரும் "ஆற்றூர்த் துஞ்சினத் தேவர்கள்" என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தஞ்சை இராஜராஜீச்சுரத்தில் நாம் காணும் கருவறை பிரநாளத்தினை தாங்கும் பூதகணத்தின் பேரளவானது புள்ளமங்கையில் மேற்கூரையில் உள்ள கணங்களை மாதிரியாகக் கொண்டுள்ளது. அதற்குமுன் அத்தகைய பெரிய பூதகண சிற்பங்களை வேறெங்கும் காணலரிது. மேலும் மனிதர்களைப் போன்றே உயரம், உடலமைப்புடைய சிற்பங்களை கோட்டங்களில் அமைத்தல் என்ற புள்ளமங்கை, திருவாவடுதுறை போன்ற பராந்தகனின் கோயில்களின் முறை போன்றே பெரிய கோயிலில் இராஜராஜன் கோட்டங்களிலும், கருவறைச் சுற்றிலும், விமானத்தளங்களிலும் சிற்பங்களை எடுப்பித்துள்ளான்.

"பகைவனுக்கு எதிரி" என்னும் பொருளுடைய பெயர் கொண்ட பராந்தகன் தன் 48 ஆண்டுகள் ஆட்சிக்காலம் முழுவதும் போர்கள் சூழ்ந்த நிலையில் சோழப் பேரரசை விரிவுபடுத்தி நிலைப்படுத்தினான். இந்த இருமுடிச்சோழனுக்குப் பின் இராஜராஜ ராஜகேசரியே எண்ணிறந்த போர்களில் வெற்றிகண்டு மும்முடிச்சோழன் ஆகிறான். பரகேசரி நாற்பத்தெட்டாண்டு காலம் அரசியல், சமூக, சமய ரீதியில் குடிகளோடு பெற்ற அனுபவத்தினைப் போலவே மாமன்னனும் கி.பி. 984-1014 வரையிலும், தான் ஆட்சிக்காக காத்திருந்த 16 ஆண்டுகளையும் சேர்த்து 45 ஆண்டுகள் மிகச்சிறந்த ஆட்சித்திறம்பட்ட அனுபவத்தினைப் பெற்றவன் என்பதையே அன்னார் தம் கல்வெட்டு வரலாறு நமக்கு சான்று பகர்கின்றன.

பராந்தகன் தன் பரந்த பேரரசுக்கு ஏற்படும் இன்னல்களைத் தவிர்க்க வேண்டி திருமுனைப்பாடியில் தன் மகன் இராசாதித்தனை படையொடு தங்கியிருக்கச் செய்தான். அவ்வாறே இராசகேசரி தம் அரசுக்கு எதிராகக் கிளம்பிய வேளிர்களை அடக்க மகன் இராஜேந்திரனை கங்கைகொண்டசோழபுரம்

அமைக்க விரும்பினான். மேலும் மகள்கள் வீரமாதேவிக்கு இராஷ்டிரகூடரோடும், அநுபமாவுக்கு கொடும்பாளூர் வேளிரோடும் திருமண உறவு கொண்ட பாட்டன் போலவே இராஜராஜனும் மேலைச் சாளுக்கியரோடு தன் மகள் குந்தவைக்கு மணஉறவு கொண்டான். இவ்விருவரின் மணஉறவுச் செயல்களிலும் அரசியல்புலம் அமைந்துள்ளது இங்கு கவனிக்கத்தக்கது.

குடிகளோடு தாம் கொண்ட இந்த அனுபவமானது இவ்விரு அரசர்களின் ஆட்சி, நிலநிர்வாக முறையை நமக்குக் காட்டுகிறது. வழங்கப்பட்ட பிரமதேய ஊர்களின் ஆட்சி, நிர்வாகமானது அங்கு குடவோலை முறையினால் தேர்ந்தெடுக்கப்பட்ட மகாசபை உறுப்பினர்களால் நடத்தப்பட்டதென உத்தரமேரூர் கல்வெட்டு கூறும் பராந்தகனும், "உலகளந்தான் கோல்" கொண்டு நிலங்களை அளந்து, புறவுவரி திணைக்களம் என்னும் நிலநிர்வாகத்தினை ஏற்படுத்திய இராஜராஜனும் மிகச்சிறந்த நிர்வாகிகள் என்றே கூறவேண்டும். குடிகளோடு கோயில்களைத் தொடர்புபடுத்திய பெருமையும் அன்னார்களுக்கே உரியது. ஐந்நூறு பொன் கழஞ்சு கொடுத்து குடப்படை முதல் கலசம் வரை திருவாவடுதுறைக் கோயிலை தானே முன்னின்று கற்றளியாக்கிய பராந்தகனின் 38-ம் ஆட்சியாண்டு (ARE. 1925/143) கல்வெட்டும், நாம் கொடுத்தனவும் என்று பெருமையுடன் இராஜராஜன் குறிப்பிடும் பெரிய கோயில் ஸ்ரீவிமானக் கல்வெட்டும் ஒப்புநோக்கி அரியத்தக்கதன்றோ.

# இராசாக்கள் மங்கலம் – அகழாய்வுப் பணிகள் 2009–2010

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம் இராசாக்கள் மங்கலம் என்ற ஊருக்கு அருகில் உள்ள மண்மேட்டில் இரணியன் குடியிருப்பு என்ற பகுதியில் உள்ள மண்மேட்டில் அகழாய்வுப் பணி தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையில் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றது.

அகழாய்வுக் குழிகளில் (EKP-1,2,3) உருண்டை மற்றும் நீள் உருண்டை கற்கள், ஆற்று மணல், செங்கல் துண்டுகள் ஆகியவை அதிக அளவில் கிடைக்கின்றன. 20 செ.மீ. ஆழத்தில் செங்கற்களான (இரண்டு வரிசையில்) தரைப்பகுதி காணப்படுகிறது. இவ்வரிசை 40 செ.மீ. ஆழம் வரை செல்கிறது, இதனை அடுத்து 60 செ.மீ. ஆழத்தில் கருங்கற்களால் ஆன அடித்தளப்பகுதி அனைத்துக் குழிகளிலும் வெளிப்படுத்துப்பட்டுள்ளது. இது நன்கு ஒழுங்கு செய்யப்பட்ட கருங்கற்கள் பாவப்பட்ட தரைப்பகுதியாகும். இது சதுரவடிவிலான கட்டிடப்பகுதியாக 12.64 செ.மீ. அளவிலானது.

இங்கு கிடைத்த செங்கற்கள் இரண்டு வகையான அளவுகளில் கிடைத்துள்ளன. அவை பின்வருமாறு:-

1) முதலாவது வகை 40X20X10 செ.மீ.

2) இரண்டாவது வகை 30X15X8 செ.மீ.

கிழக்கு திசையை நோக்கிச் செல்கின்ற அடித்தளத்தின் வெளிபகுதியில் + குறியீடுகள் காணப்படுகின்றன. மூன்று இடங்களில் இவை காணப்படுகின்றன. முதல் இரண்டு குறியீடுகள் 31 செ.மீ. இடைவெளியிலும், இரண்டாவது மூன்றாவதற்கும் இடையிலான அளவு 1.48 மீட்டர் முதலாவதற்கும் கடைசியாக உள்ளதற்கான அளவு 2.96 மீட்டர் ஆகும்.

23 சிற்பங்களும், ஆற்றில் 2 சிற்பங்களும் ஆக 25 சிற்பங்கள் கிடைத்துள்ளன. பெரும்பாலான சிற்பங்கள் தலைப்பகுதி உடைக்கப்பட்டே காணப்படுகின்றன. இவற்றில் பெண் சிற்பங்களும், 8 பீடம் மற்றும் பலகை கற்களும், 7 ஆண் உருவங்களும், ஆற்றில் இரண்டு சிற்பங்கள் புதையுண்டும் காணப்படுகின்றன. இச்சிற்பங்கள் அமர்ந்த நிலையிலே வடிவமைக்கப்பட்டுள்ளன.

இரணியன் குடியிருப்பு பகுதியில் நடைபெறும் அகழாய்வில் முற்காலப் பாண்டியர் காலத்திய (கி.பி. 590 -966) கோயிலின் அடித்தளப்பகுதியும், அக்காலத்தியச் சிற்பங்களும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இக்கோயில் கருவறை மற்றும் அந்திராளம் அல்லது இடைக்கட்டு ஆகியவற்றுடன் காணப்படுகிறது.

அகழாய்வில் கல்வெட்டு பயிற்சி நிறுவன மாணவர்கள் பங்கேற்றனர். மாணவர்களுக்கு அகழாய்வு குறித்து முனைவர் தி. சுப்பிரமணியன் மற்றும் திரு. சொ. சந்திரவாணன் ஆகியோர் விளக்கிக் கூறினார்கள்.

ஸ்ரீ. ஸ்ரீகுமார்
தொழில்நுட்ப உதவியர்


# சிற்ப வளங்கள் பேணுதல் விழிப்புணர்வு விழா – ஸ்ரீகபாலீஸ்வரர் திருக்கோயில்


சிற்ப வளங்கள் பேணுதல் மற்றும் பாதுகாத்தல் குறித்த விழிப்புணர்வு விழா, மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலில் 23-7-2010 அன்று நடந்தது. இதையொட்டி பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர், மகளிர் குழுவினர், அரசு ஊழியர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு ஊர்வலம் நடந்தது. நிகழ்ச்சிக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி. ஷோபனா தலைமை வகித்தார்.

தொல்லியல் துறை தொடர்பான போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு தொல்லியல் துறை முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர் முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப, அவர்கள் பரிசுகளை வழங்கினார். விழாவில், தொல்லியல் துறை வெளியீடான' 'தொல்லியல் சுற்றுலா' என்ற புத்தகத்தை, சுற்றுலாத் துறை செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இஆப, அவர்கள் வெளியிட, சுற்றுலா துறை இயக்குனர் திரு. ஏ. சி. மோகன்தாஸ் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

விழாவில், அருங்காட்சியகத் துறை, அறநிலையத் துறை, வருவாய் துறை, சுற்றுலாத் துறையினர் பங்கேற்றனர். இவ்விழாவில் பங்கேற்ற பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்கள் மற்றும் பொது மக்களுக்கு பழமையான சிற்பங்களை வேதியியல் முறையில் பாதுகாப்பது குறித்து வேதியியல் செயல்முறை விளக்கம் தொல்லியல் துறை வேதியியல் பிரிவை சார்ந்த திரு. மு. சு. அசோக்தீன், இரசாயனர், திரு. ப. இரவிசங்கர், உதவி இரசாயனர் மற்றும் சென்னை அருங்காட்சியக வேதியியல் பிரிவு அலுவலர் திரு. ஜெ. டி. ஜகனாதன், ஆய்வக உதவியர் ஆகியோர்களால் செய்து காண்பிக்கப்பட்டது. அருங்காட்சியக வேதியியல் துறை காப்பாட்சியர் திருமதி. ஜெ. எம். காந்திமதி அவர்களின் வழிநடத்தலின்பேரில் பயிற்சி மாணவர்கள் இவ்விழாவில் பங்குகொண்டார்கள். மேலும் கல்வெட்டாய்வாளர் திரு. இரா. சிவானந்தம் அவர்களால் கல்வெட்டு படியெடுப்பதைப் பற்றிய விளக்கம் அளிக்கப்பட்டது.

நெற்குப்பை தானசெப்பேடும், ஓலையும்








# DEPARTMENT OF ARCHAEOLOGY

**Established in 1961**



- Conservation and Preservation of Monuments
  Protected Monuments – 85



- Registration of Antiquities



- Excavation at historically important places
  Excavated Sites - 33 Published reports - 27



- Department Museums



- Chemical Conservation



- Printing Press




- Institute of Epigraphy



- Library



- Government Oriental Manuscripts Library and Research Centre



- Epigraphy

Copying, Reading, Deciphering and Publication

-Total inscriptions - 25000
-Intensive Epigraphy Campaign Started in 2004
-Total Districts - 32
-25 Districts were completed
-Inscriptions Copied – 23000
-Inscriptions read – 13000
-Published inscriptions – 6000
-" Kalvettu" Quarterly Journal - 80
-Monographs – 20
-Total Publications – 222



- Recent Publication Release



- Publication and Sales

- Photo Section
- Recognised by Madras University as a research centre for doing Ph.D
- Central and State Schemes for Development and Modernization of GOML & RC
- Maintenance of Monuments and Conservation of Historical Buildings carried out with Finance commission grants
  Digitalization of Epigraphs with financial assistance
- from Centre for Classical Tamil Language

Principal Secretary & Commissioner
Department of Archaeology
Tamil valarchi Valaagam, Halls Road,
Egmore, Chennai- 600008. Phone: 044-28190020,
Email ID: tnarch @tn.nic.in / archcommissioner@gmail.com
Visit Us at: www.tnarch.gov.in